மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 6 சுற்றம் : 4 ஏப்ரல் 2018 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தின் முகவரி

## ம.நடராசன்



தமிழ் மண்ணுக்குத் தண்ணீர் கொடுக்கும் தாய் மேற்குத் தொடர்ச்சி மலை

- கவிஞர் வைரமுத்து



காவிரி மேலாண்மையே இலக்கு! தொடரும் போராட்டம்



உயிர்கொல்லி ஸ்டெர்லைட் தூத்துக்குடி மக்களின் போராட்டம்



நடிகர் சவால்ராம் அவர்கள் தனது பிறந்தநாளில் முக்குலத்தோர் புலிப்படையின் தலைவர் கருணாஸ் எம்.எல்.ஏ., அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார். அருகில் முற்றம் மாத இதழ் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி



அனைத்திந்திய பத்திரிக்கை ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் 4 ஆவது மாநில மாநாடு புதுச்சேரியில் தேசியத் தலைவர் லயன் டாக்டர் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடந்தது. மாநாட்டை புதுவை முதல்வர் நாராயணசாமி தொடங்கி வைத்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜான் அவர்கள் முற்றம் மாத இதழ் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி, திரு சூசைராஜ் ஆகியோர்.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly April 2018

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
**சு.மணிமாறன்**
**அலெக்சாண்டர்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை– 600 024
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

காவிரி மேலாண்மையே இலக்கு!
– தலையங்கம்.................... 4

4800கோடியில் கேடித்தனம்.................... 7

தமிழ் மண்ணுக்குத் தண்ணீர் கொடுக்கும் தாய்
மேற்குத் தொடர்ச்சி மலை அங்கே கை வைக்காதே!
கவிஞர் வைரமுத்து எச்சரிக்கை ....................8

உயிர்கொல்லி ஸ்டெர்லைட் தூத்துக்குடி மக்களின் போராட்டம்
– வேர் மகள்.................... 17

மனுவாதிகளின் சூழ்ச்சிகள்
– அறவாழி....................20

நாடாளுமன்ற நாடகம்
– குமரேசன்.................... 21

சுப.வீ.அவர்களின் பதிவு ....................24

உண்மையைத்தேடி
–இராஜாசிங் ....................26

தமிழின் எதிரிகளை எதிர்த்து நில்!
– சூலூர் பாவேந்தர் பேரவை.................... 28

ஜாக்கிசான் எனும் கூலித்தொழிலாளி
–அலெக்சாண்டர்.................... 29

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தின் முகவரி ம.நடராசன்
– ஆசிரியர்.................... 30

இயற்கை வேளாண்மைக்கு வாரீர்
– சு.மணிமாறன் ....................32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# காவிரி மேலாண்மையே இலக்கு!

காவிரியில் மூழ்கி எழுந்தோம் காலம் காலமாக, இன்றோ காவிரியே மூழ்கிக் கொண்டிருக்கிறது. காரணம் நாம் தமிழர்கள். தமிழர் தலைவர்கள், தமிழர்களாக இதுவரை இல்லை. நாம், காவிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று கோருவதும் கர்நாடகா அதை நிராகரிப்பதும் நடுவண் அரசை நாம் அணுகுவதும் நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கச் சொல்லுவதும் அங்கே வழக்கு நடப்பதும் நீதியரசர்கள் உரிய அறம் நின்று தீர்ப்பு வழங்குவதும் அந்தத் தீர்ப்பை கருநாடகா கால் தூசியாக நினைப்பதும் இந்திய விடுதலைக்குப் பின் பார்த்துக் கொண்டிருக்கிறோம். காவிரி தொடர்பான தமிழர்களின் அணுகு முறை தவறானதோ என்று தமிழர்கள் நினைக்கத் தோன்றும் அளவிற்கு காவிரிச் சிக்கல் நீண்டு கொண்டே போகிறது.

கி. பி. 1141ஆம் ஆண்டு முதலாம் நரசிம்மன் என்ற மன்னன் மைசூரை ஆண்டான். நரசிம்மன், காவிரியில் அணையைக் கட்டி, தமிழ்நாட்டுக்குள் காவிரிநீர் வராதபடி தடுத்தான். அந்த நாட்களில் தமிழகத்தை இரண்டாம் இராசராசன் என்ற சோழ மன்னன் ஆண்டுவந்தான். நரசிம்மனின் அட்டூழியத்தை அழிக்க மைசூர் மீது படையெடுத்து, நரசிம்மனை வென்று, அணையை உடைத்து, காவிரித்தாயை விடுவித்தான்.

கி. பி. 1700களில் சிக்கதேவன் என்ற மன்னன் மைசூரை ஆண்டான். அவனும் காவிரித் தண்ணீரை அணை கட்டித் தடுத்தான். அந்த நாட்களில் திருச்சியை ஆண்டு கொண்டிருந்த ராணி மங்கம்மா பெரும்படையுடன் காவிரி தடுக்கப்பட்ட இடம் நோக்கி விரைந்தார். இதைக் கேள்வியுற்ற சிக்கதேவராயன் என்ற மன்னன் காவிரியைத் திறந்து விட்டான்.

அனுமந்தப்பா என்ற திவான் இந்தியா விடுதலை அடைந்தபின் மைசூரில் அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் அணைகள் மூலமாக காவிரியை தடுத்து வைத்தான். இதை அறிந்த





பெருந்தலைவர் காமராசர், அணைகளை திறந்து விடுங்கள், இல்லையேல் இராணுவ உதவியுடன் அணைகளைத் திறப்போம், என்று எச்சரித்தார். அனுமந்தப்பா உடனே அணையைத் திறந்துவிட்டான்.

காவிரித் தண்ணீர் தமிழகம் வந்ததற்கான வரலாறுகள் இப்படியெல்லாம் இருக்கின்றன. நிரந்தரத் தீர்வு எப்போது? அது எப்படிக் கிடைக்கும்? விடை காண முடியாததாகவே உள்ளது.

1807ஆம் ஆண்டு மைசூர் அரசுக்கும் சென்னை மாகாண அரசுக்கும் இடையே காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வதில் சிக்கல் எழுந்தது. அதன் காரணமாக 1892ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மைசூர் அரசு காவிரிக்கு குறுக்கே அணை கட்டினால், அது குறித்த முழு விபரங்களையும் சென்னை மாகாணத்துக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும் என்பதுதான் அந்த ஒப்பந்தம். 1910ஆம் ஆண்டு மைசூர் அரசு கண்ணம்பாடி என்னும் இடத்தில் 41.5 டி. எம். சி நீரைத் தேக்கும் அளவிற்கு அணை கட்டுவதற்கு அனுமதி கோரியது. ஆனால், அந்நாளைய அரசு 11 டி. எம். சி தண்ணீர் தேக்கிக் கொள்ளும்படியான அணையைத்தான் கட்ட வேண்டும் என்று உத்தரவு போட்டது. மைசூர் அரசு தனது நிலையில் பிடிவாதமாக இருந்தது. 1892ஆம் ஆண்டு பிரித்தானியா அரசு கிரிஃபின் என்பவரை இச்சிக்கலைத் தீர்க்க நடுவராக நியமித்தது.

கிரிஃபின் அவர்கள் காவிரிச் சிக்கலைத் தீர்க்க எவ்வளவோ முயன்றும் ஒன்றிப்பு வராததால் “இரண்டு தரப்பினருக்கும் திருப்தியளிக்கும் ஒரு தீர்வைத் தர இயலாததற்கு நான் வருந்துகிறேன். சென்னை மாகாணத்தின் நலன்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, மைசூர் அரசு சென்னை மாகாணத்துக்குத் தந்தது போக எஞ்சியிருக்கும் நீர் முழுவதையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று 1914 ஆம் ஆண்டு தீர்ப்புக் கொடுத்தார். அந்தத் தீர்ப்பும் ஏற்கப்படவில்லை. 1924ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒரு புதிய ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஐம்பது ஆண்டு காலம் நடைமுறையில் இருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1929, 1933 ஆகிய ஆண்டுகளில் போடப்பட்ட சில துணை ஒப்பந்தங்களின்படி மைசூர் அரசு கிருஷ்ணசாகர் அணைத் திட்டத்தையும் சென்னை மாகாண அரசு மேட்டூர் அணைத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அடுத்தடுத்த காலங்களில் சிக்கல்கள் தலைதூக்கிய வண்ணமே இருந்தன. 1976 ஆகஸ்டு மாதம் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்தம் போடப் பட்டாலும் இரு மாநில அரசுகளும் ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை.

அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 262இன்படி மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் சிக்கல்கள்



சட்டம் 1956 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. காவிரிச் சிக்கல் போலவே, பல நீர் பங்கீட்டுச் சிக்கல்களுக்கு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. கர்நாடகா, மகாராட்டிரம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா ஆற்று நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் எதிர்கொண்ட சிக்கலைத் தீர்க்க 1969ஆம் ஆண்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. மேலும், கோதாவரி, நர்மதா முதலிய ஆறுகளின் நீரைப் பங்கிடுவதில் சிக்கல்கள் எழுந்தன. அதற்கும் நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், எதுவும் நிரந்தரமாகத் தீர்க்கப்படவில்லை. பல ஆண்டுகள் கழிந்த பின் 1990 ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்றம் அமைக்கப் பட்டது. இந்த நடுவர் மன்றம் மூலமாக 1991ஆம் ஆண்டு ஒரு ஆணை வழங்கப்பட்டது. அதில் தமிழ் நாட்டுக்கு 205 டி. எம். சி தண்ணீர் ஆண்டுதோறும் தரப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், கர்நாடகா கலவரத்தில் ஈடுபட்டது. இந்தச் சிக்கல் நீண்டு கொண்டே இருந்தது.

522007 அன்று காவிரி நடுவர் மன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. அதில், தமிழகத்திற்கு 419 பில்லியன் அடிகள் காவிரி நீரும், கர்நாடகத்திற்கு 270 பில்லியன் அடிகள் நீரும் ஒதுக்கீடு செய்யப்படுவ தாக குறிப்பிடப்பட்டு இருந்தது. கேரளாவிற்கு 30 பில்லியன் அடிகள், புதுச்சேரிக்கு 7 பில்லியன் அடிகள் என்றும் பிரிக்கப்பட்டிருந்தது. கர்நாடகா இத்தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்தது.

காவிரி நீரை எந்த மாநிலமும் உரிமை கொண்டாட முடியாது என்று கூறிய உச்சநீதி மன்ற நீதிபதிகள் தமிழகத்திற்கு 177.25 டி. எம். சி. நீர் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டனர். காவிரி நடுவர் மன்றம், காவரி நதி நீர் பங்கீடு தொடர்பாக தனது இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்கு 192 டி. எம். சி நீர் ஒதுக்கியது. ஆனால், தமிழகம் 264 டி. எம். சி. தண்ணீர் வேண்டும் என்று கோரிக்கை அளித்தது. அக்கோரிக்கை நிராகரிக்கப் பட்டு 177.25 டி. எம். சி நீர் வழங்க உத்தரவிடப்பட்டது. தமிழகத்தில் 20. டி. எம். சி. நிலத்தடி நீர் உள்ளது என்பதால் தமிழகத்துக்கு 14.75 டி. எம். சி. நீர் குறை வாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நீர் கர்நாடகா விற்கு ஒதுக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. கூடுதலாகக் கிடைத்த நீரில் 10 டி. எம். சி. நீரை பாசன வசதிக்காகவும் 4.75 டி. எம். சி. நீரை பெங்களூர் நகரின் குடிநீர்த் தேவைக்கும் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

கடந்த பிப்ரவரி 16ஆம் தேதி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் “காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை செயல்படுத்துவதற்கான அமைப்பை (ஸ்கீம்) உருவாக்க ஆறு வாரங்கள்“ என கெடு விதித்திருந்தது. ஆனால் எந்த நடவடிக்கையும் இல்லை.

தற்போது தமிழகத்தில் தன்னெழுச்சியாக பல போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. காவரிச் சிக்கலுக்கான தீர்வைத் தர நடுவண் அரசு தயாராக இல்லை. காரணம், கருநாடகத்தில் நடக்கப் போகும் தேர்தல். இரு மாநிலங்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் இந்திய அரசு, ஒற்றுமை பற்றி பேசிக் கொண்டிருப்பது சாத்தான் வேதம் ஓதுவதா கத்தான் இருக்கும். ●



# 4800 கோடியில் கேடித்தனம்!

தென்னிந்தியாவில் காலூன்ற ரூ.4,800 கோடியில் பா.ஜ.கவின் ஆபரேஷன் திராவிடம் தெலுங்கு நடிகர் சிவாஜி வெளியிட்ட செய்தி.

2019 மக்களவைத் தேர்தலில் தென் இந்தியாவை வளைக்க ரூ.4,800 கோடியில் ஆபிரேஷன் திராவிடம் என்ற திட்டத்தை தேசிய கட்சி ஒன்று திட்டமிட்டுள்ளதாக தெலுங்கு நடிகர் சிவாஜி பரபரப்பான குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

பிரபல தெலுங்கு நடிகர் சிவாஜி, தமிழில், காதல் சுகமானது என்ற படத்திலும் தெலுங்கில் பல படங்களிலும் நடித்துள்ளார், சில படங்களை தயாரித்தும் இருக்கிறார். ஆந்திர மாநிலம் பிரிக்கப் பட்டபோது நடந்த போராட்டங்களில், மாநிலத்தைப் பிரிக்கக் கூடாது என குரல் கொடுத்தார். பா.ஜ.க.வில் சேர்ந்து, மாநிலத்தைப் பிரித்த காங்கிரஸை கடுமையாக விமர்சித்து வந்தார்.

சில மாதங்கள் வரை எந்தக் கட்சியிலும் இல்லாமல் சமூகப் பிரச்சினைகளை மட்டும சமூக வலை தளங்களில் சுட்டிக் காட்டி வந்தார். அண்மையில் செய்தியாளர்களைச் சந்தித்து வீடியோ ஒன்றை வெளியிட்டார். அந்த 20 நிமிட வீடியோவில் சிவாஜி தேசிய கட்சிகள் எப்படி மாநிலக் கட்சிகளின் உதவியுடன் தென் மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்ற குறி வைக்கிறது என்பதை விவரித்துள்ளார்.

ஓராண்டுக்கு முன்னர் தேசியக் கட்சியை சேர்ந்த கல்யாண்ஜியுடன் பழக்கம் ஏற்பட்டது. அவரிடம் இந்த ஆப்ரேஷன் திராவிடம் பற்றிக் கேட்டேன். இதன் முக்கிய நோக்கமே 2910ல் தென் இந்தியா முழுவதையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே என்று கூறினார்.

தென் மாநிலங்களை வகை பிரித்து இதற்கு பெயரிட்டுள்ளனர். அதாவது ஆந்திரா, தெலுங்கானவிற்கு ஆபரேஷன் கருடா, கேரளா, தமிழ்நாட்டிற்கு ஆபரேஷன் ராவணா, கர்நாடகாவிற்கு ஆபரேஷன் குமாரா என பெயர்வைத்துள்ளது பா.ஜ.க. என்றும் சிவாஜி கூறியுள்ளார்.

இந்த அரசியல் ஆபரேஷன்களை நடத்த ஸ்லீப்பர் செல்ஸ் எனப்படும் ரகசிய நபர்கள் மூலம் பா.ஜ.க.4 மாநிலங்களில் அரசியல் சித்து விளையாட்டுகளை தொடங்கி அதன் மூலம் கட்சிகளில் உட்பூசல் ஏற்படுத்துவர். பலர் தாய் கட்சிகளில் இருந்து வெளியேறுவார்கள். பலர் புதிய கட்சிகளை தொடங்குவார்கள். மக்களைக் குழப்பும் பல தகவல்களை சமூக வலை தளங்கள் மூலம் பரப்புவார்கள். இதற்கென தனி அமைப்பே உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசியல் ஆபரேஷனை வெற்றிகரமாக நடத்தி முடிக்க ரூ.4,800 கோடியை ஒதுக்கி செலவிட்டு வருகிறது.

பணத்துக்காகவும், பதவிகளுக்காகவும் சிலர் மயங்கிப் போவார்கள். குறிப்பாக ஆந்திராவில் பெரும் கலவரம் நடக்க உள்ளது. ஒடிசா மற்றும் பீஹார் மாநிலங்களில் இருந்து கூலிப்படை வரவழைக்கப்பட்டு எதிர்க் கட்சித் தலைவர் ஒருவரை தாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அரங்கேற்றிய பின்னர், ஆந்திராவில் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து தற்போதைய ஆந்திர ஆட்சியை கலைக்க திட்டமிடப் பட்டுள்ளது. முதல்வர் சந்திரபாபு நாயுடு மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் பல வழக்குகள் பதிவாகும். ஒரு கட்டத்தில் சி.பி.ஐ. விசாரணைக்கு கூட உத்தரவிடப்படும். இதன் மூலம் தெலுங்கு தேச கட்சிக்கு அவப்பெயரை உருவாக்கி சந்திரபாபு நாயுடுவை பொருளாதார ரீதியாகவும் நிலை குலையச் செய்யவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களாக நான் டெல்லியில் தங்கி இருந்தபோது ஸ்லீப்பர் செல்லில் உள்ளவர்களில் ஒருவர் இந்த தகவல்களை எனக்கு தெரிவித்தார். எனக்கு தெரிந்து அரசியல் பூதாகர விஷயங்களை ஆந்திர மக்களிடம் தெரிவிக்காவிட்டால் அவர்கள் என்னை மன்னிக்கமாட்டார்கள். ஆந்திரா மட்டுமின்றி, தென் மாநிலங்களில் நம்பக்கூட முடியாத பல செயல்களை வெற்றிகரமாக நிறைவேற்ற அந்த கீழ்த் தரமான செயல்களில் கூட ஈடுபடவும் பா.ஜ.க. தயங்காது.

பொதுமக்கள் அந்த தேசிய கட்சியின் சதியில் விழாமல் விழித்துக்கொள்ள வேண்டும் என்றும் சிவாஜி கூறியுள்ளார்.

# தமிழ் மண்ணுக்குத் தண்ணீர் கொடுக்கும் தாய் மேற்குத் தொடர்ச்சி மலை அங்கே கை வைக்காதே!

## கவிஞர் வைரமுத்து எச்சரிக்கை!

திராவிட இயக்கத்தின் போராளி, நம்முடைய வாஞ்சைக்குரிய வைகோ அவர்களே,

இந்த மேடையில் அமர்ந்து இருக்கின்ற பெருமக்களே, ஒரு இலட்சியப் பொருண்மைக்காக, தேனியின் நெடுவீதியில் குவிந்து இருக்கின்ற என் அருமைத் தமிழ்ச் சொந்தங்களே, பாசத்திற்குரிய செய்தியாளர்களே, ஊடகத் தோழர்களே, உங்கள் அனைவருக்கு எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'வைகோ' என்ற இந்த ஈரெழுத்து ஒருமொழி, தமிழ்நாட்டுக்கு ஒரு பெயர் அல்ல, தமிழர்களின் காவல் அரண். உயிர் மூச்சு உள்ளவரை இந்த மண்ணையும் மக்களையும் காப்பாற்றத் துடிக்கும் இலட்சிய வெறி கொண்டவர் வைகோ.

எந்த இடத்தில் தமிழ் மறுக்கப்படுகின்றதோ, எவ்விடத்தில் தமிழன் நசுக்கப்படுகின்றானோ, அந்த இடத்தில், கருப்புத் துண்டை உருவிக் கொண்டு ஒரு உருவம் நின்றால், அது வைகோ. எனக்குத் தெரிந்த, தமிழ்நாட்டு மேடை வரலாற்றில், வைகோவைப் போல நினைவாற்றல் கொண்ட ஒரு பேச்சாளன், வேறு யாரும் இல்லை என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

வைகோவிடம் எனக்கு ரொம்பப் பிடித்தது அவரது குரல், ஒரு கால் நூற்றாண்டுக்கும் மேலாக, அந்தக் குரல் நம்மை மையம் கொள்கின்றது, அந்தக் குரல் தமிழோடு உலாவுகின்றது. அந்தக் குரல் ஓங்கி ஒலிக்கின்றது. கண்ணீர் சொட்டுகின்ற நேரத்தில், அடி சுதியில் பேசுகின்றது. எனக்குத் தெரிந்து விலைவாசியும், வைகோவின் குரலும் ஒன்றுதான். இரண்டும் ஏறுவனவே தவிர, இறங்குவதே இல்லை.

இந்தக் கூட்டம் ஒரு இலக்கியக் கூட்டம் அல்ல. இது ஓர் அலங்காரக் கூட்டம் அல்ல. இது ஓர் அரசியல்





கூட்டம் அல்ல. இது பிரச்சாரக் கூட்டம் அல்ல. இந்த மண்ணைக் காப்பதற்கான இலட்சியக் கூட்டம். இந்த மண்ணை உயர்த்திப் பிடிப்பதற்கான விழிப்புணர்வுக் கூட்டம்.

இந்தக் கூடடத்தில், அலங்காரங்கள் வேண்டாம், ஆர்ப்பாட்டங்கள் வேண்டாம், சொல் அழகு வேண்டாம், சூட்சமங்கள் வேண்டாம், தன் அறிவை வெளிப்படுத்துகின்ற ஒரு ஆற்றலாளன் இங்கே வேண்டியது இல்லை. உணர்ச்சியை, உண்மையை, சத்தியத்தை, பொருண்மையை வெளிப்படுத்துகின்ற பேச்சு மட்டும்தான் இந்த மன்றத்துக்குத் தேவை.

வைகோ அவர்களே! கம்பம் அப்பாஸ் போன்ற அறிவாளிகளைப் பக்கத்தில் வைத்து இருப்பதால்தான், நீங்கள் இன்னும் உச்சத்தில் இருக்கின்றீர்கள். அப்பாஸ் இங்கே பேசியதைக் கேட்டு நான் நெகிழ்ந்து போனேன். ஒரு பாமரன் போலத் தோன்றுகிற அப்பாஸ், இன்றைக்கு இந்தக் கூட்டத்தில் ஒரு விஞ்ஞானியைப் போலப் பேசி இருக்கின்றார். ஆம், தமிழன் பார்ப்பதற்கு பாமரன் போல இருப்பான். ஆனால், அவன் உலக அரங்கை வெற்றி கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவன். வைரமுத்து இந்த மேடைக்கு வந்ததால் வைகோவைப் பெருமைப்படுத்திய தாக நினைக்கலாம். அப்படி அல்ல, இந்த மேடைக்கு வந்ததனால், நானும், இந்த மண்ணும் பெருமைப்படுகின்றோம். உங்களால் பெருமைப் படுகின்றோம். இந்த மேடைக்கு நான் நன்றி தெரிவித்தக் கொள்கின்றேன்.

இந்த நியூட்ரினோ என்றால் என்ன? இதன் மீது வைக்கப்படுகின்ற விவாதம் என்ன? வினாக்கள் என்ன? என்பதை, நான் என் நாட்டு மக்களுக்கு, என் மண்ணில் மக்களுக்கு, இங்கே சில மணித்துளிகள் சொல்லிவிட்டுப் போவதற்கு வாய்ப்புக் கொடுத்த வைகோ அவர்களை நான் வணங்குகிறேன்.

நியூட்ரினோ என்றால் என்ன என்பதை அறியாமல், இந்தக் கூட்டம் கலைந்து செல்வது தகாது. நியூட்ரினோ திட்டம் ஏன் எதிர்க்கப்படுகின்றது? ஏன் மறுக்கப்படுகின்றது? என்ன விளைவுகளை இந்த மண்ணில், காற்றில், விண்ணில் உண்டாக்கும் என்பதை, இங்கே வந்திருக்கின்ற ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டு செல்ல வேண்டும்.

அறிவு என்பது முக்காலத்திற்கும் பொதுவானது. அந்த அறிவைத் தெரிந்து கொள்கின்றவன், அதை அற்றம் காக்கும் கருவியாகப் பயன்படுத்துகின்றான். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

அறிவு அற்றம் காக்கும் கருவி.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையரேனும் இலர்.

தமிழ்ச்சாதி அறிவுடைய சாதி. தமிழன், உலகுக்கு அறிவை ஓதுகின்றவன். அவன் எப்படி முட்டாளாக இருக்க முடியும்?

பெரியார் ஒருமுறை சொன்னார், இந்த மண்ணில், தமிழன் முட்டாளாக இருக்க முடியாது. இது வெப்ப நாடு. இங்கே பிறந்த எதுவும் ஊனமுற்றதாக இருக்க முடியாது என்று.

மலையில் ஒரு ஆறு ஓடுகின்றது. அதற்குச் சுவை குறைவு, தரையில் ஒரு ஆறு ஓடுகின்றது, அதற்குச் சுவை அதிகம். ஆக்சிஜன் அதிகம். குளிர் மலையில் பூக்கின்ற பூவுக்கு வாசனை குறைவு. வெப்ப நாடு. நிலக்கோட்டையில் மொட்டு வெடிக்கின்ற மல்லிகைப் பூவுக்கு வாசனை அதிகம். மலையில் இருக்கின்ற பாம்புக்கு விசம் குறைவு. இந்தத் தரையில், இதோ இந்த அரண்மனைப் புதூரில், கொடுவிலார்பட்டியில், புதுப்பட்டியில், எண்டப்புளியில் என எங்கு பார்த்தாலும் ஒரு பாம்பு குட்டிப் பாம்பாக இருந்தாலும் அது விசப்பாம்பு.

வெப்ப நாட்டில் ஓடுகின்ற ஆறு சுவையுள்ளதாக இருக்கின்றபோது, வெப்ப நாட்டில் ஊர்கின்ற பாம்பு, விசமுடையதாக இருக்கின்றபோது, வெப்ப நாட்டில் வெடிக்கின்ற மொட்டு வாசனை உள்ளதாக இருக்கின்றபோது, வெப்ப நாட்டில் பிறந்த தமிழா நீ மட்டும் எப்படி முட்டாளாக இருக்க முடியும்? என்று கேட்டவர் பெரியார்.

கஞ்சி குடிப்பதற்கில்லார், அதன் காரணங்கள் இவையென்னும் அறிவும் இல்லார். கஞ்சி குடிப்பதற்கு இல்லை என்பது சமூகம் கொடுத்த சாபம். அது தனி மனிதனுடைய சாபம் அல்ல.

வறுமை என்பது சமூகத்தினுடைய சிஸ்டம். வறுமை என்பது குற்றம் அல்ல, பாவம் அல்ல, வறுமையை அறிந்து கொள்ளாது இருப்பது, புரிந்து கொள்ளாது இருப்பது பாவம்.

கஞ்சி குடிப்பதற்கு இல்லால் அவர்களை மன்னித்துவிட்டான் பாரதி. அதன் காரணங்கள் இவையென்னும் அறிவு இல்லார் இது தாண்டா பாவி கொடுமை.

நியூட்ரினோவை நீங்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதும், புரிந்து கொள்ளாது இருப்பதும் நம்முடைய சமூகத்தின் குற்றம் என்றே நான் கருதுகின்றேன்.

அந்தக் குற்றத்தைக் களையத்தான், இந்த நடையில் நின்றுயர் நாயகன் இத்தனை கிலோ மீட்டர் நடந்து வருகின்றார்.

வைகோ அவர்களே, நடக்க நடக்க நீங்கள் இளமை பெறுகிறீர்கள். நடக்க நடக்க உங்கள் வியர்வை வெளியேறுகின்றது. உங்கள் சிறுநீரகங்கள் செய்ய வேண்டிய வேலையை வியர்வை சுரப்பிகள் செய்து வெளியேற்றி விடுகின்றன.

இந்த நடை உங்களை இன்னும் மிடுக்கோடு வைத்து இருக்கின்றது. நீங்கள் நடந்தால் நாடு நடக்கின்றது. அதற்காக நீங்கள் நடக்க வேண்டும்.

தோழர்களே, பேரறிஞர் அண்ணா சொன்ன வாசகம் எனக்கு நினைவுக்கு வருகின்றது. இந்தக் கூட்டத்தில் நான் கொஞ்சம் விஞ்ஞானம் பேசப் போகின்றேன். நடுச் சாலையில் நின்று கொண்டு விஞ்ஞானம் பேசப் போகின்றாயா? ஆம்! பேச வேண்டும். எனக்கு எப்படி இந்த தைரியம் வந்தது?

அண்ணா கொடுத்த தைரியம்! அண்ணா சொன்னார்: "எங்கள் பொதுக்கூட்டங்கள் எல்லாம் பொழுது போக்குக் கூட்டங்கள் அல்ல. மாலை நேரக் கல்லூரிகள்" என்று.

அந்த மாலை நேரக் கல்லூரியை தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிற முதல்வர் நம்முடைய வைகோ. அந்த மாலை நேரக் கல்லூரிக்கு நாங்கள் எல்லாம் துணைப் பேராசிரியர்கள். அவர்தான் முதல்வர் என்று நான் அவரைக் கொண்டாடுவேன்.

நியூட்ரினோ என்பது ஒரு அடிப்படைத்துகள். புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் என்பது போல, நியூட்ரினோ என்பது ஒரு அடிப்படைத் துகள். உங்களைக் கோடிக்கணக்கான நியூட்ரினோக்கள் கடந்து கொண்டு இருக்கின்றன. உங்கள் உடம்புக்குள் புகுந்து, உங்களை அறியாமல் வெளியேறிக் கொண்டு இருக்கின்றன. ஒரு பென்சில் வைக்கின்ற புள்ளியில், அல்லது ஒரு தாய் குழந்தையின் கன்னத்தில் வைக்கிற திருஷ்டிப் பொட்டில், இரண்டு இலட்சம் கோடி நியூட்ரினோக்கள் இருக்கின்றன. இந்த அடிப்படைத் துகளைக் கண்டுபிடிக்க முடியாது.

மேற்கு உலகம், தென்கிழக்கு ஆசிய உலகம், தற்போது இந்தியா நியூட்ரினோவைக் கண்டுபிடிக்கும் முயற்சி செய்கின்றன. இந்தத் துகள் எதையும் உரசாது.

வானவெளியில், அண்ட வெளியில் பொழிந்து கொண்டே இருக்கின்றது. சூரியனில் இருந்து வருகிறது, கோள்களைக் கடக்கின்றது. தரைகளைக் கடக்கின்றது. அண்டங்களைக் கடக்கின்றது. பயணப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இந்த அடிப்படைத் துகளைக் கண்டறிந்தால், பிரபஞ்ச ரகசியத்தைக் கண்டறிய முடியும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கின்றது.

ஊடகத் தோழர்களே, வைகோ, வைரமுத்து இரண்டு பேரும் தேனியின் நெடுவீதியில் நின்று பேசுகின்றார்கள். இவர்கள் இரண்டு பேருமே அறிவியலுக்கு எதிரிகள் அல்லர். விஞ்ஞானம் என்றால், இந்த விளக்கு இல்லை. தாமஸ் ஆல்வா எடிசன், ஐசக் நியூட்டன், ஐன்ஸ்டீன் இந்த மூன்று பேரையுந்தான் நான் கண்கண்ட மும்மூர்த்திகள் என்கிறேன்.

இந்த மூன்று பேரும் இல்லை என்றால், ஒலி பெருக்கி இல்லை, இந்த மின்சாரம் இல்லை, கடிகாரம் இல்லை, நம் தோற்றத்தில இந்தப் பளபளப்பு இல்லை, இந்த அலைபேசி இல்லை, அண்டம் இல்லை, இந்த வீடியோ கேமரா இல்லை, எதுவுமே இல்லை.

விஞ்ஞானம் இல்லை என்றால் வாழ்வு நகராது. நாங்கள் அறிவியலுக்கு எதிரிகள் அல்ல. மக்களுக்கு எதிரான விஞ்ஞானத்திற்கு விரோதிகள். எங்கள் மரபுகளை அழிக்கப் பார்க்கிற விஞ்ஞானத்திற்கு விரோதிகள்.

நியூட்ரினோ அடிப்படைத் துகளைக் கண்டறிவதற் குத் தான் இந்த அம்பரப்பர் மலை ஒரு சல்லடையாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மலையின் உச்சியில இருந்து 1500 மீட்டர் குடையப்பட்டு அடித்தளம் கண்டபிறகு, 132 மீட்டர் நீளம், 32 மீட்டர் அகலத்தில் சுரங்கம் குடையப்படுகின்றது. இதில்தான் 50 ஆயிரம் டன் இரும்பு இறக்கப்பட்டு, மின்காந்தம் ஊட்டப்படு கின்றது. மின்காந்தம் ஊட்டப்பட்ட இரும்பைக் குளிர்விப்பதற்கு எவ்வளவு தண்ணீர் தேவைப்படும் வெள்ளை அறிக்கையை இதுவரை இவர்கள் வெளியிடவில்லை.

இந்தக் கூட்டத்தின் மூலமாக வைகோவும், வைரமுத்தவும் விஞ்ஞான உலகத்திற்கும், மத்திய அரசுக்கும் விடுக்கின்ற வேண்டுகோள் இதுதான்.

“நாங்கள் விஞ்ஞானத்தை எதிர்க்கவில்லை. எங்களை எதிர்க்கிற விஞ்ஞானத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். எங்களைப் பாதிக்க வைக்கின்ற விஞ்ஞானத்தை எதிர்க்கின்றோம்.“

எங்கள் கேள்விகளுக்கு எல்லாம் பதில் தயாரித்து இந்திய ஊடகங்களிலும் உலக ஊடகங்களிலும் எங்களுக்கு நீங்கள் விடை தெரிவித்துவிட்டால், நாங்கள் அந்த விடைகளுக்கு விடை தரத் தயாராக இருக்கின்றோம்.

இதற்கு எங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைதான் கிடைத்ததா தோழர்களே? வைகோ கேட்டாரே, குஜராத் மக்கள் மீது எங்களுக்குப் பாசம்தான். அவனும் இந்தியன்தான். இல்லை, இல்லை அவனும் மனிதன்தான். இன்னொரு மனிதன் இன்னொரு உயிர் எங்களுக்கு முக்கியம்தான், தன் உயிர் போல மண்ணுயிரைக் கருதுகின்றவன் தமிழன்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகிறவன் தமிழன். அதனால் குஜராத் மீது எங்களுக்கு எந்த எதிர்ப்போ, வெறுப்போ இல்லை. அவனும் வாழ வேண்டும் என்று வைகோ வாதிட்டார். இந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் பெருமைகளைத் தெரிந்தால், அதைத் தொட்டுப் பார்க்க உங்களுக்குத் திராணி வருமா? வைகோ அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையை எண்ணி நீங்களும் நானும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். கர்வப்பட்டுக் கொள்ளலாம்.

15 கோடி ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலப்பரப்பு, ஆப்பிரிக்காவோடு ஒட்டி இருந்தது. மடகாஸ்கரோடு ஒட்டி இருந்தது. 15கோடி ஆண்டுகளுக்கு முன்பு, மடகாஸ்கர் நிலப்பரப்பு நம்மிடம் இருந்து பிய்த்து எறியப்பட்டு, ஆசியக் கண்டம் ஆனது. 8 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு புவியியல் கலகத்தால் பிய்த்து எறியப்பட்ட இந்த மண்ணில் எரிமலை வெடித்து மேலே ஏறி, இந்த மேற்குத் தொடர்ச்சி மலை உருவானது. எனவே, இந்த மலையின் புவியியல் வயது 8 கோடி ஆண்டுகள்.

எங்கள் வீட்டில் என் தாத்தா பயன்படுத்திய ஒரு மண்வெட்டி இருக்கின்றது. ஒரு கலப்பையைத் தூக்கி மேலே வைத்து இருக்கின்றோம். எனக்குத் தெரிய, அது 85 ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட கலப்பை. அதைத் தொட்டாலே என் ரத்தம் கொதிக்கின்றதே, எட்டுக் கோடி ஆண்டுகளாக இந்த மண்ணுக்கு நீர் கொடுத்த தாய், ஆறுகளை இறக்கிவிட்ட தாய், எங்களுக்கு கவிதை சொல்லிக்கொடுத்த கருவூலம், வானத்தில் இருந்து மழையைக் கறந்து கொடுத்த தாய், அதை எப்படி உன்னால் தொட முடியும்?

இந்த மேற்குத் தொடர்ச்சி மலை என்பது சாதாரணமானது அல்ல தோழர்களே, குஜராத்தில் நர்மதையை, தபதியை இன்னும் பல ஆறுகளை இறக்கிவிட்டது இந்த மலைதான்.

ஆந்திரத்தில் கிருஷ்ணாவை, கோதாவரியை இநத் மண்ணுக்கு இறக்கி விட்டது இந்த மேற்கு தொடர்ச்சி

மலை, கர்நாடகத்தில் கபினியாகவும் தமிழ்நாட்டில் காவிரியாகவும் பாய்கின்ற ஆற்றை இறக்கிவிட்டதும் இந்த மேற்குத் தொடர்ச்சி மலை. தமிழ்நாட்டில் நொய்யல் ஆற்றை இறக்கி விட்டது மேற்குத் தொடர்ச்சி மலை. தமிழ்நாட்டிற்குள் பிறந்து, தமிழ்நாட்டுக்குள் உள்ளேயே ஓடி முடியும் தாமிரபரணியை இறக்கி விட்டதும் இந்த மலைதான்.

இந்த மலைதான் இந்தியாவின் 60 விழுக்காடு மண்ணை நனைக்கின்றது என்கிறது புவியியல். அதில் கை வைக்கலாமா?

மூன்றாம் உலகப் போர் என்ற எனது நூலில் எழுதி இருந்தேன். இமய மலைக்குக் கிடைத்த விளம்பரம் ஏன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிடைக்கவில்லை? இமயமலை என்பது பொறுக்கு மலை. உறுதி அற்ற மலை. சொல்லப்போனால், அது ஒரு காலத்தில் கடல். அந்தக் கடலுக்குள் இருந்து எழுந்த மண்மேடுதான் இமய மலை.

எட்டுக்கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்தக் கல்லை இன்றைக்கு நீங்கள் தொடலாமா? வெட்டி எடுக்கலாமா? உடைத்து நொறுக்கலாமா? இந்தக் கல்லை நீங்கள் சிதைக்கலாமா?

5000 வகை தாவரங்கள் உள்ளன இந்த மலையில். 520 வகைப் பறவைகள், 65 வகைப் பாம்புகள், 125 வகை ஈருயிரிகளைக் கொண்டது இந்த மேற்குத் தொடர்ச்சி மலை. இந்த மலை இல்லை என்றால், பள்ளி வயதில் எழுதுவதற்கு எங்களுக்குக் கற்பனை கஜானா இல்லாமல் போயிருக்கும். இந்த வைரமுத்துவை எழுத வைத்தது இந்த மேற்குத் தொடர்ச்சி மலை. பாரதிராஜாவை சிந்திக்க வைத்தத இந்த மேற்குத் தொடர்ச்சி மலை. இளையராஜாவுக்கு இசை கொடுத்தத இந்த மேற்குத் தொடர்ச்சி மலை. இந்த மேற்குத் தொடர்ச்சி மலை மட்டும் இல்லை என்றால், நாங்கள் ஒரு வறண்ட பாலைவனத்தின் புத்திரர்களாகப் போயிருப்போம்.

இப்போதும்கூட சென்னைக்காரர்கள் என்னை அடிக்கடி கேட்கும் கேள்வி, ஊருக்குப் போவீங்களா என்று. நீங்கள் தப்பாகக் கேட்கிறீர்கள், ஊரில் இருந்து சென்னைக்கு அடிக்கடி வருவீங்களா, அப்படிக் கேளுங்கள். ஆம் நான் இப்போதும் என் ஊரில் இருந்துதான் சென்னைக்கு வந்து கொண்டு இருக்கிறேன். எனக்கு ஊர் கரட்டுப்பட்டிதான், வடுகப்பட்டிதான், தேனிதான், வைகை அணைதான் நம்ம ஊரு.

மாதத்திற்கு ஒரு முறை மேற்குத் தொடர்ச்சி மலையையும் வைகை அணையையும் வந்து பார்க்காவிட்டால் எனக்கு உடம்பு சரியில்லாமல் போய்விடும். இரண்டு மாதம் பார்க்காவிட்டால் மேற்குத் தொடர்ச்சி மலைக்கே உடல்நலம் இல்லாமல் போய்விடும். வைகை அணை வற்றிப் போய்விடும்.

வைகை அணையை வாழ வைப்பதற்கும், மேற்குத் தொடர்ச்சி மலையின் ஈரம் காயாமல் இருப்பதற்கும் இந்த மண்ணுக்கு வந்து வந்து செல்கின்றோம் என்பதுதான் உண்மை. இந்த மண்ணை நீங்கள் எப்படிப் பறிக்கலாம்?

இந்த நியூட்ரினோ திட்டத்திற்கு ஒரு நாளைக்கு மூன்று இலட்சம் லிட்டர் தண்ணீர் வேண்டும். இந்தத் தண்ணீருக்கு எங்கே போவது? எனக்கு அச்சமாக இருக்கின்றது. மத்திய அரசுக்கு ஒரு வார்த்தை, நியூட்ரினோ திட்டத்திற்கு 1500கோடி ஒதுக்கு கின்றீர்கள். இந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் தீர்ந்த விட்டனவா? இங்குள்ள மக்கள் அனைவருக்கும் குடிதண்ணீர் கிடைத்து விட்டதா?

எல்லோருக்கும் உணவு கிடைத்து விட்டதா? எல்லோருக்கும் வேலை கிடைத்து விட்டதா? செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ முடியுமா? என்ற யோசிக்கின்றீர்களே, அவனது சொந்த ஊரில் மனிதன் வாழ முடியுமா என்று யோசித்தீர்களா?

இந்த மண்ணில் வாழ்வதற்கு இடம் இல்லை, வசதி இல்லை என்றால், செவ்வாய்க் கிரகத்திற்கு கோள் அனுப்பி என்ன பயன்? செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்து என்ன பயன்? செவ்வாய்க் கிரகத்தில் ஆக்சிஜன் இல்லை, மழை இல்லை. நிலா என்பது சபிக்கப்பட்ட பாலைவனம். அங்கு ஒன்றும் கிடையாது. அதனால்தான் "அழகிய நிலவில் ஆக்சிஜன் நிரப்பி, அங்கே உனக்கொரு வீடு செய்வேன்" என்று எழுதினேன். அங்கு காதலிக்கு வீடு கட்ட வேண்டும் என்றால் முதலில் ஆக்சிஜன் வேண்டும்.

செங்கல் சிமெண்ட் பிளாட்டுக்கு அனுமதி எல்லாம் அதன் பிறகுதான். உயிர்க்காற்று இல்லாத கோள்களில் மனிதனைக் குடியேற்ற நினைப்பவர்களே, ஆக்சிஜன் உள்ள பூமி மண்டலத்தில் என் ஆக்சிஜனைக் களவாடப் பார்க்கின்றீர்கள்? என்பதுதான் கேள்வி.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். எங்களுக்குச் சில கேள்விகள் உண்டு. இவற்றுக்கு தயவு செய்த நீங்கள் பதில் சொல்ல வேண்டும். இந்தக் குடுவையில் இருக்கும் தண்ணீர், ஒரு முல்லைப் பெரியாறு கொடுக்க வேண்டும். இல்லை என்றால் சுருளி ஆறு, வைகை ஆறு கொடுக்க வேண்டும். அல்லது மஞ்சளாற்றில் இருந்து கொண்டு வர வேண்டும். அனைத்து அணைகளையும் ஒருமுறை

சென்று பார்த்தேன். 1500 மீட்டர் குடையப் பார்க்கின்றீர்களே, இந்த அணைகளில் 10 மீட்டர் மண் தூர் வார முடியாதா?

தூர் வாரினால் நான்கு ஐந்து டி.எம்.சி. நீர் கூடுதலாக இந்த மக்களுக்கு கிடைக்கும் அல்லவா? இராமநாதபுரம் வரைக்கும் நனையும் அல்லவா? மதுரையில் தண்ணீர்ப் பஞ்சம் வராது அல்லவா? எங்கள் மக்கள் சாக்கடை ஓரத்தில் சாக்கடை நீரில் குடியிருக்கின்றார்களே, அவர்களை மீட்பதற்கு என்ன வழி? என்று கேட்கக்கூடிய காலம் வந்திருக்கிறது.

இந்த உலகம் மிகமிக மோசமாகச் சந்திக்கக்கூடிய மிகப்பெரிய பஞ்சம், தண்ணீர்ப் பஞ்சம். 2050இல் நாங்கள் இருப்போமா இல்லையா தெரியாது. உங்களில் 90 விழுக்காடு இருப்பீர்கள். ஆனால், நீங்கள் எல்லாம் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டுமா? என்றால், இருக்கக் கூடாது.

2050இல் தண்ணீர் எங்கே கிடைக்கும்? உலகத்தில் அற்புதமான ஊர் ஆப்பிரிக்காவில் உள்ள கேப்டவுன். அங்கே இப்போது ஒரு நாளைக்கு 50 லிட்டர் தண்ணீர் ரேசனில் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். சாப்பிட, குடிக்க, குளிக்க, கழிப்பறைக்குச் செல்ல, எல்லாமே அந்த 50 லிட்டருக்குள்தான்.

இந்த 50 லிட்டர் தண்ணீரும் தொடர்ந்து கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. கேப்டவுன்' என்ற மிகப்பெரிய உலக நகரம் காலியாகிக் கொண்டு இருக்கின்றது. உலகத்தில் தண்ணீருக்கான முதல் சாவு மணி கேப்டவுனில் அடிக்கப்பட்டு இருக்கின்றது.

இங்கு வராது என்பது நிச்சயம் அல்ல. முன்பெல்லாம் பஞ்சம் என்பது தவழ்ந்து வரும். தொழில் நுட்பம் தவழ்ந்து வரும். இப்போதெல்லாம் வானத்தில் இருந்து குதிக்கின்றது. அந்தப் பஞ்சம் இந்தியத் துணைக்கண்டத்தில் குதிப்பதற்கு எவ்வளவு நாள் ஆகும்?

உலகத்தில் உள்ள தண்ணீரை எப்படிப் பயன்படுத்துகின்றோம், உலகத்தின் மொத்தத் தண்ணீர் 100 சதவிகிதம் என்றால், 97 சதவிகிதம் கடல்நீர். ஒரு சதவிகிதம் பனி மலைகளில் உறைந்து கிடக்கின்ற பனி நீர். அதை எடுக்க முடியாது.

இன்னும் ஒரு சதவிகித நீர் பூமிக்கு ஆழத்தில் கண்டுகொள்ள முடியாத பள்ளத்தில் முண்டுகொள்ள முடியாத ஆழத்தில் உறைந்து கிடக்கின்றது. உறங்கிக் கிடக்கின்றது. ஒட்டுமொத்த 680 கோடி மனிதர்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் உட்கொள்வது எல்லாம் ஒரு சதவிகிதத் தண்ணீரைத்தான். மனிதர்கள் வாழ்வதற்கே தண்ணீர் இல்லாமல் இருக்கின்றோமே, இரும்பைக் குளிர்விப்பதற்கு எவ்வளவு தண்ணீரைக் கேட்கின்றீர்கள், கழிவுகளை என்ன செய்வீர்கள்?

வெட்டப்பட்ட பாறைகளையும் புழுதிகளையும் என்ன செய்வீர்கள்? அங்கு ஏற்படக்கூடிய புழுதிப் படலம், மேற்குத் தொடர்ச்சி மலையில் நான்கில் ஒரு பங்கை மூடிவிடும் என்பது எங்கள் ஊகம்.

நாங்கள் மாடு மேய்த்தபோது தான் மலையை நேசித்தோம். மாடு, ஆடு மேய்க்கின்றபோது எங்களுக்கு இருந்த சுதந்திரம்தான் பெரியது. மாடு ஒரு பக்கம் மேயும், நாங்கள் வானத்தை மேய்ந்து கொண்டு இருப்போம். ஆடு ஒரு பக்கம் மேயும், நாங்கள் அகிலத்தை மேய்ந்து கொண்டு இருப்போம். ஆடு, மாடு மேய்க்கிறவனுக்குச் சுதந்திரம் தராத தேசம், முழு சுதந்திரம் பெற்ற தேசம் ஆகாது.

நியூட்ரினோ ஆய்வுக்கூடத்தைச் சுற்றி ஒரு கம்பி வேலி கட்டி விடுவார்கள். அதற்குள் தமிழனை மட்டும் அல்ல, இந்தியனை நுழைய அனுமதிக்க மாட்டார்கள். ஏனென்றால், வெளிநாட்டு ரசியன், செர்மானியன், பிரிட்டீசு, சப்பானிசு எவனாவது உளவு பார்க்க வந்தால், நியூட்ரினோ திட்டத்தின் உளவு வேலையை அறிந்து கொண்டால் இன்னொரு அணுக்கூடத்தை இவர்கள் அழித்துவிட முடியும். இதை அவன் அழித்து விட முடியும். எனவே உளவு பார்க்க வந்துவிடுவானோ என்ற அச்சத்தில், ஒரு இந்தியனையும் உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். அந்தப் பகுதியே சீல் வைத்த ஒரு இடமாக மாறி விடும். தேனித் தமிழன், கிட்டே நெருங்க முடியாது.

எங்கள் காற்று, எங்கள் மலை, எங்கள் மேகம், எங்கள் விறகு, எங்கள் சருகு, எங்கள் புல், எங்கள் நாடு எப்படி இதை நான் விட்டுக் கொடுக்க முடியும்? எங்கள் வீட்டுக்குள்ளேயே சிறை இருப்பது எவ்வளவு பெரிய குற்றமோ, அதே மாதிரிதான் எங்கள் மலைக்குக் கீழே நாங்கள் சிறை இருப்பது. இந்தச் சுதந்திரத்தை நாங்கள் எப்படி விட்டுக் கொடுப்பது?

ஆயிரம் டன் ஜெலட்டின் வெடிமருந்து கொண்டு உடைக்கும்போது, எங்கள் பறவைகள் என்ன ஆகும்? அலைபேசி கோபுரங்களால் சிட்டுக்குருவிகள் அழிந்து போய்விட்டதற்கே எவ்வளவு துயரப்பட்டீர்கள்? ஆயிரம் டன் ஜெலட்டின் பயன்படுத்தப்பட்டால் எத்தனை வகைப் பறவைகள் அழியும்? எத்தனை உயிர்க்குலம் அழியும்? எத்தனை வகைப் பூச்சிகள் அழியும்?

இந்தப் பூமி மனிதனுக்காக மட்டும் படைக்கப் பட்டது அல்ல. இந்தப்பூமி முதலில் பூச்சிகளுக்கு,

பறவைகளுக்கு, விலங்குகளுக்கு, தாவரங்களுக்கு, முதன் முதலில் பூமியில் பிறந்த கரப்பான் பூச்சிக்கும் கொசுவுக்கும் சிங்கத்துக்கும் யானைக்கும் புலிகளுக்கும் குரங்குகளுக்கும் சொந்தமாய் இருந்த இந்தப் பூமியை, ஆறாவது அறிவு படைத்த மனிதன் இன்று தந்திரமாய்க் கைப்பற்றிக் கொண்டான்.

ஏழாவது அறிவு படைத்த விஞ்ஞானி, மத்திய அரசு, இப்போது அதைக் கைப்பற்றப் பார்க்கிறது. வைகோ அவர்கள் முன் வைத்த கேள்வியை நான் நிறைவுக் கேள்வியாக முன் வைக்கின்றேன்.

நியூட்ரினோ திட்டம் என்பது, நியூட்ரினோ கற்றைகளைக் கண்டுபிடிப்பதில் மட்டும் முடிந்து விடுமா, அதற்கு உத்தரவாதம் உண்டா? வைகோ வலப்புறமும் இடப்புறமும் இல்லை என்று தலையை அசைக்கின்றார். இருக்காது கவிஞனே, இருக்காது என்கிறார்.

இந்த உலகத்திற்கு மிக மிக முக்கியமாகத் தேவை எது என்று தெரியுமா? வளர்ந்த நாடுகளுக்குத் தேவை எல்லாம் குப்பைத் தொட்டிகள். சமையலறை, கழிப்பறை, ஹால், நடுக்கூடம், வாசல் என்று குப்பைத் தொட்டிகள் இருந்தால்தான் உங்கள் வீடு சுத்தமாகும் என்பது நடைமுறை.

வளர்ந்த நாடுகளுக்கு நான்கு அல்ல, நாலாயிரம் குப்பைத் தொட்டிகள் தேவை. மருத்துவக் கழிவுகளைக் கொட்டுவதற்கும் அணுக் கழிவுகளைக் கொட்டுவதற்கும் பிளாஸ்டிக் குப்பைகளைக் கொட்டுவதற்கும் மட்கும் பொருளையும் மட்காப் பொருளையும் கொட்டுவதற்கும் நிறையக் குப்பைத் தொட்டிகள் தேவை. வளர்ந்த நாடுகளே, மேற்குலக நாடுகளே, உங்களைப் பார்த்துக் கேட்கின்றேன், உங்கள் குப்பைத் தொட்டிகளில் ஒன்றாக இந்தியாவையும் கருதுகின்றீர்களா? அதை இந்தியன் அனுமதிப்பானா? தமிழன் அனுமதிப்பானா?

அணுக் கழிவுகளைக் கொட்டி சீல் செய்வதற்கு இது ஒரு முயற்சியாக இருக்குமோ என்ற எங்கள் சந்தேகத்திற்கு விளக்கம் உண்டா? சில நாடுகளில் அணுக் கழிவுகளைக் கசியாத அளவுக்கு பேக் செய்து பூமிக்கு அடியில் புதைக்கிறார்கள். இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு அணுக்கதிர்வீச்சு பூமியில் இருக்கும். இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் அணுக்கதிர் செயல் இழக்கும்.

மேல் நாடுகளில் அப்படி புதைத்து வைக்கப்பட்டு இருந்த அணுக்கழிவுத் தொட்டிகள் முப்பது, நாற்பது ஆண்டுகளிலேயே கசிய ஆரம்பித்து விட்டன. இங்கே அப்படி ஒரு அணுக்கழிவு வந்தால், எங்கள் தேவாரம் என்ன ஆவது? எங்கள் போடி என்ன அவது? கோம்பை என்ன ஆவது? கம்பம் என்ன ஆவது? நான் மிகவும் நேசிக்கின்ற கோகிலாபுரம் என்ற அந்த அழகிய சிற்றூர் என்ன ஆவது?

இன்னும் இந்தக் காற்று எங்களுக்குச் சொந்தம் என்று நினைக்கின்றோம். இந்த வானம் எங்களுக்குச் சொந்தம், அதிலிருந்து விழுகின்ற மழைத்துளி எங்களுக்குச் சொந்தம், இந்த மண் எங்களுக்குச் சொந்தம். எதை வேண்டுமானாலும் இழப்போம். ஆனால் எங்கள் மண்ணை இழக்க மாட்டோம் என்பதுதான் தமிழனின் அடிப்படை.

இந்த மண்ணில் கை வைக்காதீர்கள். வைகோ எந்தப் பிரச்சினையைத் தொட்டாலும் அது விஸ்வரூபம் எடுக்கும்! வைகோ அவர்களே, நீங்கள் தமிழ் நாட்டுக்கு ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வந்து இருக்கின்றீர்கள். நீங்கள் எந்தப் பிரச்சினையைத் தொட்டாலும் அந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து விடுகின்றது.

முதலில் தமிழ்நாடு கவனிக்கிறது. பிறகு இந்தியா கவனிக்கிறது, பிறகு உலகமே திரும்பிப் பார்க்கின்றது. அது தான் வைகோவின் ஜாதகம். எனவே, வைகோவை உலகம் கவனிப்பதற்கு அவர் கொஞ்ச நாள் காத்திருக்க வேண்டும்.

அதாவது ஐ. ஆர். 8 நெல், 90 நாட்களில் விளைந்து விடும். சீரக கிச்சடிச் சம்பா விளைய 120 நாள்கள் ஆகும். வைகோ கிச்சடிச் சம்பா.

எனக்கான அங்கீகாரம் இருக்கின்றதா? இல்லையா? சின்னச்சின்ன ஒத்தடங்கள்தானே கிடைக்கின்றது என்று வைகோ அவர்கள் கொஞ்சம் சலித்துக் கொண்டார்கள். வைகோ அவர்களே, ஆங்கிலத்தில் ஒன்று சொல்லுவார்கள், Long Term Investment என்று. ஐந்து ஆண்டுகள் அரசியல் என்பது, குறுகிய கால முதலீடு. வைகோ செய்வது நீண்ட கால முதலீடு. தமிழனுக்கான முதலீடு. தமிழ் இனத்திற்கான முதலீடு.

தமிழர்களே அறிவு பெறுங்கள், தமிழ் இனமே, அறிவை முன்னிலைப்படுத்து. மண்ணைக் காப்பாற்ற வேண்டும், மொழியைக் காப்பாற்ற வேண்டும், இனத்தைக் காப்பாற்ற வேண்டும். 3000 ஆண்டு மரபியல் நாகரிகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால், வைகோவின் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்போம் வாரீர்.

*(2018 ஏப்ரல் 3ஆம் நாள், தேனியில் நடைபெற்ற நியூட்ரினோ எதிர்ப்பு வைகோ நடைபயண விளக்கக்கூட்டத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஆற்றிய உரை. தட்டச்சு அருணகிரி சங்கரன்கோவில்.)*

●

# இந்திய நாட்டின் வாக்குப்பதிவு இயந்திரத்தின் நிலை?

இந்தியாவில் உள்ள ஓட்டு இயந்திரங்களை எளிதில் ஹேக் செய்துவிட முடியும் என அமெரிக்கா வைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த மிக்ஸிகன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்திய ஓட்டு இயந்திரங்களை ஹேக் செய்யும் புதிய தொழில்நுட்பத் தைக் கண்டறிந்துள்ளனர். வீட்டில் உபயோகப்படுத்தப் படும் ஒரு தொழில்நுட்ப இயந்திரத்துடன் இந்திய ஓட்டு இயந்திரத்தை இணைத்துவிட்டால் பின்னர் எளிமையாக நமக்குத் தேவையான தேர்வு முடிவுகளை மொபைல் குறுஞ்செய்தி மூலமாகவே மாற்றம் செய்து கொள்ளலாம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்தியாவில் பயன்படுத்தப்படும் ஓட்டு இயந்திரங்கள் நம்பகத்தன்மை கொண்டவை என்றும், அதனை ஊடுருவி அவ்வளவு எளிதாக அதனை சேதப்படுத்த முடியாது எனவும் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மிக்ஸிகன் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட ஒரு வீடியோவில் இந்தியாவில் பயன்படுத்தப்படும் ஓட்டு இயந்திரத் துடன் அவர்கள் வீட்டு உபயோகப் பொருளினை இணைத்துக் காண்பித்துள்ளார்கள். பேராசிரியர் ஜே. அலெக்ஸ் ஹால்டெர்மன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சியில் இந்திய ஓட்டு இயந்திரங்கள் தேர்வு முடிவுகளை மாற்றம் செய்வதற்காக எளிதில் உதவுவதாக தெரிய வந்துள்ளது. இது குறித்து பேராசிரியர் ஜே. அலெக்ஸ் கூறுகையில் "நாங்கள் இந்திய ஓட்டு இயந்திரத்தைப் போன்றே டிஸ்பிளே கொண்ட இயந்திரம் ஒன்றினை உருவாக்கினோம். ஆனால் அதனுடன் புதிதாக மைக்ரோசிப் மற்றும் ப்ளூடுத் போன்றவற்றின் புதிதாக இணைத்துள்ளோம். இந்தக் கருவியில் மொத்த ஓட்டுக்கள் காண்பிக்கப் படாமல், மாற்றம் செய்யும் புதிய எண்ணிக்கையே திரையில் தோன்றும். இதனைக் கொண்டே தேர்தல் முடிவுகளை மாற்றம் செய்ய விரும்பும் நபர் எளிதில் அதனை தனக்கு விருப்பமானபடி மாற்றம் செய்து கொள்ளலாம்" எனத் தெரிவித்தார்.

ஆனால் இது குறித்த பிபிசி செய்தியாளர்களிடம் பேசிய இந்தியாவின் துணைத் தேர்தல் அணையர் அலோக் சுக்லா அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். இந்திய ஓட்டு இயந்திரங்கள் மிகவும் கடினமானவை. அதனை எளிதில் எந்தவித கருவிகளைக் கொண்டும் ஊடுருவ இயலாது.

அது சாதாரண இயந்திரம் கிடையாது எவராலும் எளிதில் திறக்க முடியாத வகையில் மிகவும் பாதுகாப்பு நிறைந்த பெட்ட கமாகவே அது உள்ளது எனத் தெரிவித்தார்.

மேலும் ஒவ்வொரு தேர்தலின் பொழுதும் ஓட்டு இயந்திரத்தைப் பாதுகாக்க முத்திரைகள் வைக்கப்படும். எனவே அதனை வேறு எவரும் திறக்க இயலாது எனக் கூறினார்.

இதுல யாரு சொல்றது சரி? அலோக் சுக்லா பொய் சொல்ல மாட்டாரு!?

**ஆரோக்கிய சார்லஸ்,**
தஞ்சாவூர்.





# அண்ணாவின் புலமை

ஒருமுறை லண்டனில் நடந்த கூட்டத்தில், ஆங்கிலத்தில் "complete'' என்ற சொல்லுக்கும் "finished'' என்ற சொல்லுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று கேட்டார்கள்.

கூட்டத்தினர் இரண்டு சொல்லுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்று கூறினார்கள்.

அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார், "நீங்கள் ஒரு சரியான பெண்ணைத் திருமணம் செய்தால், உங்கள் வாழ்க்கை "complete ".

"அதுவே நீங்கள் ஒரு தவறான பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் உங்கள் வாழ்க்கை "finished ".

"அந்த சரியான பெண் உங்களை ஒரு தவறான பெண்ணுடன் கையும் களவுமாகப் பிடித்து விட்டால் உங்கள் வாழ்க்கை "completely Finished " என்றார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட கூட்டத்தினர் எழுந்து நின்று ஐந்து நிமிடங்கள் கை தட்டினார்கள்.

# வழி...

**கடுகு உளுந்த நனச்சு சமைச்சு ருசிச்சுச் சாப்பிட் டேன் என அவன் கூறினார் ய என்றேன்.**

**க டு கு 1**

**உ ளுந்து 2**

**ந னைச்சு 3**

**ச மைச்சு 4**

**ரு சிச்சு 5**

**சா பிட்டேன் 6**

**எ ன 7**

**அ வன் 8**

**கூ றினான் 9**

**ய என்றேன் 0**

**மகிமைதாஸ்**



கடந்த சில நாட்களுக்கு முன் கட்செவியில் தூத்துக்குடி பெண் ஒருவர், புற்றுநோயால் பாதிக்கப் பட்டு, வாய் பேச முடியாத அளவில், படுத்த படுக்கையாக இருக்கும் தனது கணவர் பிள்ளையோடு கதறி அழும் பதிவைப் பார்த்தவர்கள் அனைவரும் ஸ்டெர்லைட் ஆலையை உடனே அகற்ற வேண்டும் என்ற முடிவிற்கு வந்திருப்போம். அந்த ஆலையால் தூத்துக்குடி பகுதி மக்கள், பல நோய்களுக்கு ஆளாகி தங்களது வாழ்வதாரத்தையும் இழந்து தவிக்கும் அவலத்தை இனிமேலும் அரங்கேற வைத்திடுதல் நல்லதல்ல.

தூத்துக்குடிப் பகுதியில் கடந்த 16 ஆண்டுகளாக அப்பகுதி மக்களையும் அங்குள்ள நிலங்களையும் நீரையும் காற்றையும் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறது ஸ்டெர்லைட் ஆலை.

இந்த ஆலையின் உரிமையாளர் அனில் அகர்வால் என்பவர். வேதாந்தா ரிசோர்ஸ் என்ற நிறுவனப் பெயருடன் இயங்குகிறது. இதன் தலைமையிடம் இலண்டன். இந்த ஆலையில் தாமிரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த உற்பத்தியின் போது கல்ப்யூரிக் அமிலம், பாஸ்ஃபோரிக் அமிலம் வெளியேறுகிறது. கூடவே நச்சக் காற்றுகளும் வெளியேறுகின்றன. அதாவது ஒரு டன் தாமிரம் உற்பத்தி செய்யப்படும் பொழுது இரண்டு கிலோ கந்தக டை ஆக்சைடு வெளியேறுகிறது. காற்றில் கலக்கும் நச்சுத் துகள்கள் காற்றைக் கடுமையாக மாசுபடுத்துகின்ற. தொழிற் சாலையிலிருந்து வெளியாகும் கழிவு நீரில் உள்ள காரீயம், காட்மியம், துத்தநாகம், ஆர்செனிக், பாதரசம் போன்ற உலோகங்கள் நீரை நேரடியாக நச்சுப்படுத்தக் கூடியவை. ஒரு டன் தாமிரம் உற்பத்தி செய்யப்படும் போது மூன்று டன் திடக்கழிவுகள் வெளியிடப்படு கின்றன. திடக்கழிவுகள் கொட்டப்படும் நிலங்கள் மீட்க முடியாதபடி பாழாய்ப் போய் விடுகின்றன.

இந்த ஆலை நிறுவப்படுவதற்கு முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் குஜராத் மாநிலம். அங்கே எதிர்ப்புக் கிளம்பவே நிறுவப்படல் இயலாமல் போய்விட்டது. அதன் பிறகு கோவா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களும் இந்த ஆலைக்கு அனுமதி மறுத்துவிட்டன. மாகாராட்டிரம் இரத்தின கிரியில் சரத்பவார் முதல்வராக இருந்த காலத்தில் இந்த ஆலைக்கு அங்கே அனுமதி கொடுக்கப்பட்டது. அப்போது அங்குள்ள விவசாயிகள் கடுமையான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர். அதைத்



# உயிர்க்கொல்லி ஸ்டெர்லைட் தூத்துக்குடி மக்களின் போராட்டம்




தொடர்ந்து 1.5.1994 அன்று தடை செய்யப்பட்டது.

ஸ்டெர்லைட் ஆலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப் பாட்டு வாரியம் 1.8.1994 அன்று வழங்கிய அனுமதிக் கடிதத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பட வேண்டிய மன்னார் வளைகுடாவிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவிற்கு அப்பால்தான் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். தொழிற் சாலையைச் சுற்றி 250 மீட்டருக்கு பசுமை வளையம் அமைக்கப்பட வேண்டும் என்று நிபந்தினைகள் விதித் திருந்தது. ஆனால் இந்த ஆலை மன்னார் வளை குடாவிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைக்கப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஆலையைச் சுற்றி பசுமை வளையத்தையும் ஆலை நிர்வாகம் ஏற்படத்தவில்லை.

தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் ஸ்டெர்லைட் ஆலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டு ஜெயலலிதாவால் 30101994 அடிக்கல் நாட்டப்பட்டது. தூத்துக்குடியில் துறைமுகம் இருப்பதால் அனுமதி கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த ஆலைக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்படு கிறது. இந்த ஆலையின் பாதிப்புகளை உணர்ந்த வர்கள் போராடத் தொடங்கினர்.

1996ஆம் ஆண்டு ஆலையை எதிர்த்து முதல் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியது. தென் மாவட்டங்களில் உள்ள சாதிச்சண்டைகளால் போராட்டம் நீர்த்துப் போயிற்று. ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 1997ஆம் ஆண்டு வழக்குத் தொடுக்கப்பட்டது.

ஸ்டெர்லைட் ஆலையின் இயக்கத்தைப் பற்றியும் விதிமீறல்கள் பற்றியும் முனைவர் தியாகராாசன் தலைமையிலான குழுவினர் 21.9.2004 அன்று ஒரு அறிக்கை வெளியிட்டனர். இரு உருளை வடிவ தாங்கு உலைகளையும் கழிவுகளை தூய்மை செய்யும் ஓர் உலையையும் ஒரு ஆனோடு உலையையும் ஒரு ஆக்சிஜன் பிரிவையும் ஒரு கந்தக அமிலப் பிரிவையும் ஒர காஸ்டர் பிரிவையும் ஒரு கன்வெட்ரையும் எவ்வித அனுமதியும் பெறாமல் நிறுவியுள்ளனர். இரண்டு பாஸ்பரஸ் அமிலப் பிரிவுகளும் சுத்திகரிப்பு மற்றும் தொடர்ச்சியான காஸ்டர் ராட் உருவாக்கும் பிரிவும் கட்டப்பட்டு வருவதாகவும் அதற்கும் அனுமதி பெறவில்லை என்று அந்த அறிக்கை சுட்டிக் காட்டியது.

சென்னை உயர்நீதிமன்ற நிதியரசர்கள் பால் வசந்தகுமார், எலிபி தர்மராவ் தலைமையிலான அமர்வு ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை நிரந்தரமாக மூடுமாறு 28.9.2010 அன்று ஆணை யிட்டனர். "மன்னார் வளைகுடா சுற்றுச்சூழல் பாது காக்கப்பட வேண்டிய பகுதி என்பதில் சந்தேகமில்லை. எனவே இந்தப் பகுதியில் உயிர்வாழ் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்காக தொழிற்சாலைகளை ஒழுங்கு படுத்தும் அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. மத்திய அரசு அத்தகைய உத்தரவைப் பிறப்பித்தம் ஸ்டரெலைட் தொழிச்சாலையை சிப்காட் தொழில் வளாகத்திலிருந்து இடம் மாற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்" என்று தீர்ப்பளித்திருந்தது உயர்நீதி மன்றம்.

2010ஆம் ஆண்டு ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையை மூடும்படி பிறப்பிக்கப்பட்ட சென்னை உயர்நிதிமன்ற உத்தரவை தள்ளுபடி செய்தது உச்சநீதி மன்றம். 1997ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ஸ்டெர்லைட் ஆலை ஏற்படுத்திய சேதங்களுக்கு நிவாரண மாகவும் உரிய அனுமதிகள் பெறாமல் தொழிற்சாலையை நீண்ட காலம் நடத்தியதற் கான அபராதமாக நூறு கோடி ரூபாய் கட்ட வேண்டும் என்றும் 2010 11 ஆண்டு கம்பெனியின் இலாபமான ஆயிரத்து நாற்பத்து மூன்று கோடி முந்தைய நிதி ஆண்டில் கிடைத்த எழுநூற்று நாற்பத்து நான்கு கோடியை விட நாற்பது விழுக்காடு அதிகம். அதனால் நூறு கோடி ரூபாய் அபராதம் என்ற கடும் தண்டனையை விதிக்க வேண்டியிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு கொடுத்தது. ஸ்டெர்லைட் ஆலை உருவாக்கும் வேலை வாய்ப்புகள், அரசுக்கு செலுத்தும் வரித் தொகைகள், அது உற்பத்தி செய்து நாட்டுக்கு அளிக்கும் தாமிரத்தின் முக்கியத்துவம் இவற்றைக் கருத்தில் கொண்டு அபராதத்தைக் கட்டி விட்டு அது தனது நடிவடிக்கைகளை தொடர அனுமதிக்கிறோம் என்று தீர்ப்பளித்தது உச்சநீதி மன்றம்.



2011 12ஆம் ஆண்டில் ஸ்டெர்லைட் நிறுவனம் விற்பனையின் மூலம் பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தொரு கோடி ஈட்டியிருக்கிறது. அதில் ஊழியர்களுக்கு ஊதியமாக கொடுக்கப்பட்ட தொகையின் மதிப்பு வெறும் தொன்னூற்று இரண்டு கோடி மட்டுமே. ஸ்டெர்லைட் ஆலையின் மொத்த விற்பனை வருமானத்தில் நாற்பத்து எட்டு விழுக்காடு தரும் வேலை வாய்ப்புகளுக்காக இலட்சக்கணக்கான மக்களின் உடல் நலத்தையும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்துக் கொள்ளலாம் என்கிறது உச்சநீதி மன்றம். ஸ்டெர்லைட் நிறுவனம் அரசுக்கு செலுத்தி தொள்ளாயிரத்து அறுபது கோடி கலால் வரியையும் சுமார் ஐந்நூற்று ஐம்பது கோடி வருமான வரியையும் முழுவதுமாக செலவிட்டால் கூட நிலங்களுக்கும் கடல் வளங்களுக்கும் மக்களின் உடல் நலத்துக்கும் இந்த ஆலை ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளுக்கு நிவாரணம் செய்வது சாத்தியமில்லை என்பதுதான் உண்மை.

தூத்துக்குடி மக்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்ற ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை ஒரு ஆண்டில் ஈட்டிய நிகர இலாபம் 1,657 கோடி. இந்த லாபத்தில் 939கோடி டுவின் ஸ்டார் என்ற லண்டனைச் சேர்ந்த வேதாந்தா குழும நிறுவனத்துக்கும் 206 கோடி சிட்டிபேங்க் நியூயார்க் நிறுவனத்துக்கும் போகிறது. ஒரு ஆண்டில் 939 கோடி ரூபாய் லாபம் பெறும் வேதாந்தா, ஸ்டெர்லைட் நிறுவனத்தில் செய்த பங்கு முதலீடு வெறும் 336 கோடி மட்டுமே. அதாவது 16 ஆண்டுகளில் தனது முதலீட்டுப் பணத்தை பல மடங்கு திருப்பி எடுத்த பிறகு ஒரு ஆண்டு முதலீட்டின் மீது சுமார் 300% லாபம் ஈட்டியிருக்கிறது.

ஸ்டெர்லைட் ஆலையால் மக்களுக்கு பாதிப்பு என்பதையும் கடந்து, அந்த ஆலையிலேயே பல விபத்துகள், மனிதப் பலிகளும் நடந்துள்ளன என்பது இன்னும் வேதனை. 1997 ஆம் ஆண்டில் ஏழு சிலிண்டர்கள் வெடித்தன.

அடுத்த விபத்து கந்தகக் குழாய் வெடித்ததால் ஏற்பட்டது. அதில் ஒருவர் பலியானார். மூன்றாவதாக செப்புக்கலவை வெடிப்பு இதில் மூன்று மனித உயிர்கள் போயின. நான்காவது விபத்து சல்ப்யூர்க் அமில குழாய் வெடித்ததால் ஏற்பட்டது. அதில் ஐந்து பொறியாளர்களும் பன்னிரெண்டு கூலித் தொழிலா ளர்களும் மாண்டனர். அடுத்து ஆயில் டேங்க் வெடித்து விபத்து ஏற்பட்டது.

தமிழக மக்களை அழித்து, தமிழகத்தின் வாழ் வாதாரத்தை அழித்து யாரோ பணத்தை கொள்ளை யடிக்கும் இந்த நிலையை அகற்றுவதற்காகத்தான் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறுகின்றன. இனிமேல் தமிழகத்தில் இதுபோன்ற அத்துமீறல்கள், வாழ்வாதார அழிவுகள், பண்பாட்டு அழிவுகளுக்கு இடமில்லை என்பதை நடைபெற்றுக் கொண்டிருக் கின்ற ஒவ்வொரு போராட்டங்களும் எடுத்துக் கூறுவதாய் இருக்கின்றன. தூத்துக்குடிப் பகுதி மக்கள் நலமுடன் வாழ ஒட்டுமொத்த தமிழகமும் துணை நிற்க வேண்டும் என்பதுதான் தமிழர் என்று சொல்லும் ஒவ்வொருவரின் கடமையாக இருக்க வேண்டும்.

**வேர்மகள்**



# மனுவாதிகளின் சூழ்ச்சிகள்

தமிழ்நாட்டில் படித்தவர்களே இல்லை. படித்தவர்களுக்கு தமிழ்நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இப்படித்தான் இருக்கிறது தமிழ்நாட்டிற்கு அனுப்பப் பட்ட ஆளுனர் பன்வாரிலால் புரோகித்தின் செயல்பாடுகள்.

தமிழகத்தின் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக கருநாடக மாநிலத்தின் சூரப்பா என்பவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். காவிரி ஆற்றுத் தண்ணீர்ச் சிக்கலால் தமிழகமே கொதித்துக் கொண்டிருக்கிற வேளையில் இப்படி ஒரு எதேச்சதிகாரச் செயலைச் செய்திருக் கிறார் ஆளுனர்.

சூரிய நாராயணசாஸ்திரி என்பவர் புனே பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவிக்கு விண் ணப்பம் செய்தார். இவர் மராட்டிய மாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் இல்லை, ஆந்திர மாநிலத் துக்காரர் என்று கூறி, அந்த மாநில அரசு அவரது விண்ணபத்தை நிராகரித்து விட்டது. ஆனால், தமிழகத்தின் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தராக இந்த ஆளுநரால் நியமிக்கப்பட்டார் ஆந்திராவைச் சேர்ந்த சூரிய நாராயண சாஸ்திரி.

தமிழ்நாடு இசைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக பிரமிளா குருமூர்த்தி என்பவர் நியமிக்கப் பட்டார். இவர் கேரளாவைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. ஆக, தமிழகத்தில் பல்கலைக்கழகங் களின் உயர் பொறுப்பான துணைவேந்தர் பதவிக்கு தகுதியானவர்களே இல்லையா? என்னடா இது தமிழனுக்கு வந்த சோதனை?

வேண்டாததைச் செய்து, அல்லது வாய்ச் சொற்களால் எதையாவது கிளப்பி விட்டு, மனிதர் களுக்கு மனிதர்கள் எதிர்க்கும்படியாகவும் மாநிலத் துக்கு மாநிலம் பகை கொள்ளும்படியாகவும் தரங் கெட்ட செயல்களைச் செய்து கொண்டிருப்பதே வேலை என்பதை மனுவாதிகள் செய்து கொண்டிருக் கிறார்கள். அதையே மனுவாத அரசும் செய்கிறது. மனுவாத அரசின் அடிவருடி அடிமைகளும் அதையே செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத்தின் ஒட்டு மொத்த மக்களும் மனுவாதிகளின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொண்டா லொழிய எந்தச் சிக்கலுக்கும் தீர்வு காண முடியாது.

***அறவாழி.***

அ.தி.மு.க. அணிகள் இணைந்ததே பிரதமர் மோடி அறிவுரைப்படிதான் என்று துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ்.வெளிப்படையாகவே அறிவித்தார். அந்த அளவுக்குத் தலையிட முடிந்த பிரதமரால், காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் அதிமுக தலைவர்களை அழைத்துப்பேசி, நம்பிக்கை ஏற்படுத்தியிருக்க முடியாதா?

அப்படிச் செய்யவில்லை என்பதே, நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து அதிமுக எம்பிக்கள் முடக்கியதன் மூலம், பாஜ.கவுக்கு சாதகமாக அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கையில்லாத தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள விடாமல் தவிர்க்கிற ஒரு நாடகம்தான் இது என்பதைக் காட்டுகிறது.

நாடாளுமன்றத்தில் இப்படி பாஜகவுக்கு சாதகமாக அதிமுக செயல்படுகிறது என்றால் அதற்கு மறு உதவியாகத் தமிழகத்தில் அதிமுக அரசின் மீதான விமர்சனங்கள் மக்களிடையே பரவாமலும் முன்னுக்கு வராமலும் தடுப்பதற்கு உதவியாக, மதப்பிரச்சனை உள்பட தேவையற்ற சர்ச்சைகளை பாஜக எழுப்புகிறது.

2014க்குப் பிறகு நாடாளுமன்றம் கூடியபோதெல்லாம், எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய முக்கிய பிரச்சனைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள மறுத்து, அமளி ஏற்படுவதற்கு இட்டுச் சென்று, நாடாளுமன்றத்தையே முடக்கி வந்திருக்கிறது பாஜக அரசு. 2014க்கு முன் எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலும் நாடாளுமன்றத்தை முடக்கி, மற்ற கட்சிகள் முக்கியப் பிரச்சனைகளை எழுப்ப விடாமல் தடுத்து வந்தது பாஜக.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக அறிவிக்கப்படுமா என்ற கேள்வி நாடாளுமன்றத்தில் எழுப்பட்டபோது, உச்சநீதி மன்றம் அதை ஏற்காததால் அப்படியொரு சட்டம் கொண்டுவரும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று சட்ட அமைச்சர் சொன்னார். அந்தப் பிரச்சனையில் உச்சநீதிமன்றத்தைக் கைகாட்டி நழுவுகிற பாஜக அரசு, அதே உச்சநீதிமன்றம் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க



# நாடாளுமன்ற நாடகம்

வேண்டும் என்று பிறப்பித்துள்ள ஆணையை ஏற்க மறுப்பது ஏன்?

கண்டிப்பாக வாரியம் அமைக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாக தமிழக பா.ஜ.கதலைவர்கள் கூறுகிறார்கள். அந்த நம்பிக்கையை அதிமுக எம்பிக் களுக்கு மத்திய அரசு அளிக்கத் தவறியது ஏன் என்ற (நெறியாளுநரின்) கேள்விக்கு ஒரு துணைக்கேள் வியைக் கேட்க விரும்புகிறேன். அப்படியானால் அதிமுக எம்பிக்கள் தொடர்ந்து அவையை முடக்கி வருவதற்கு வேறு நோக்கம் இருப்பதாக பாஜக நினைக்கிறதா?

மார்ச் மாதம் 29ஆம் தேதி வரையில் பொறுமை யாக இருப்போம் என்று தமிழக சட்டமன்றத்தில் அதிமுக அரசு கூறியது. இது அக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்தாதா? அவர்கள் பொறுமையாக இல்லாமல் நாடாளுமன்றத்தை முடக்கி வருவது எதற்காக?

கேரளத்தில் மார்க்சிஸ்ட் கட்சி தலைமையிலான அரசு, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்க மறுக்க வில்லை. காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் அது கேரளத்திற்கும்தான் பயனளிக்கும். ஆகவே, கேரள அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்பில் உள்ள நீர் அளவு உள்ளிட்ட ஆணைகள் தொடர்பாக விளக்கம் கேட்டிருப்பதில் வேறு உள்நோக்கம் கிடையாது.

தீர்ப்பைச் செயல்படுத்துவது, தொடர்பாக மாநில மக்களுக்கு எடுத்துரைப்பதற்காகவும், எதிர்க்கட்சி களுக்குச் சொல்வதற்காகவும், செயல்படுத்துவதில் நடைமுறைச்சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கா கவும் நீதிமன்ற ஆணை தொடர்பாக விளக்கம் கேட்பதில் தவறு ஒன்றுமில்லை.

அதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கர்நாடக மாநிலக்குழு, வாரியம் உள்ளிட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்பை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று தான் வலியுறுத்தியிருக்கிறது. தேர்தல் ஆதாயக் கணக்குப் போட்டு, பாஜக காங்கிரஸ் போல இந்தத் தீர்ப்புக்கு எதிரான நிலைப்பாட்டை மார்க்சிஸ்ட் கட்சி எடுக்கவில்லை.

தமிழகத்தில் 90 சதவீத மக்கள் அதிமுக அரசின் இந்த அணுகுமுறையை வரவேற்பதாக இங்கே சொல்கிறார் அக்கட்சியின் பிரதிநிதி. அதற்காக மக்களிடம் ஏதாவது கருத்துக்கணிப்பு நடத்தப் பட்டதா? ஆனால், இந்த விவாதம் நடந்துகொண்டி ருக்கும்போதே, சமூக ஊடகத்தில் (முகநூல்) பதிவு செய்யப்படும் கருத்துகளில் பெரும்பாலனவை இது நாடகம்தான், பாஜகவுக்குத்தான் சாதகம் என்றுதான் வருகின்றன.

புதிய தலைமுறை தொலைக்காட்சியின் (மார்ச் 23) நேர்படப் பேசு நிகழ்ச்சியில் நான் கூறிய கருத்துகளின் சாரம். உடன் பங்கேற்றோர் கோவை செல்வராஜ் (அதிமுக) செல்வப் பெருந்தகை (காங்கிரஸ்) துரை கருணா பத்திரிகையாளர், ஸ்ரீனிவாசன் பாஜக மதுரையிலிருந்து நெறியாளுகை: செந்தில்வேல்.

**திரு. குமரேசன்.**

## தெரிந்து கொள்க!

| | |
|---|---|
| பேச்சு - | Speech |
| உடன் - | Sudden |
| தாக்கு - | Attack |
| கயிறு - | Coir |
| கட்டுமரம் - | Catamaran |
| கற்கண்டு - | Candy |
| கட்டில் - | Cot |
| வெற்றி - | Victory |
| தேக்கு - | Teak |
| ஒன்று - | One |
| மாங்காய் - | Mango |
| காசு - | Cash |
| இஞ்சி - | Ginger |
| ஆறு - அஞ்சு - ஆரஞ்சு | |
| ஆணை கொண்டான் - | Anaconda |
| சுருட்டு - | Cheroot |
| கூலி - | Coolie |
| முருங்கை - | Moringa |

# எனது தொடக்கமானது...

நம் சுயத்தை உடைக்கும்
சுயநலம் கொண்டோரை
சுத்தியால் அடித்திடுவோம்
நம் தன்மானத்தைத்
தகர்த்தெறிந்தால்
அவர் அங்கத்தை
அறுத்தெறிவோம்!

சாதிகள் வேண்டாம் என்றோம்
பதவி வேற்றுமை வந்ததடி
தகுதி கொண்டோரையெல்லாம்
தலைகுனியச் செய்ததடி
அறிவற்றோர் அரியணையில்
நம்போல் அறிஞர்கள் பணிந்தோமடி!
சுதந்திர நாட்டிலே
இன்னும் நம்போல் அடிமையின்
கால் தடங்கள்
புதைகுழி என்றறிந்தும்
புதைந்திட துணிந்தோமடி!
இது ஏழ்மையின் ஏக்கமடி
என்று தீருமடி?...

சிரியாவின் வன்முறைகளை
அசைபோடும் நாம் . அறியாதது
நம்நாடு நம்மிடம் இல்லை
என்பதுதான்.

உதடுகள் சிரிக்க
கற்றுத் தருகிறேன்
உள்ளம் அழுவதை
வெளிக் காட்டாதிருக்கும்படி.

உமது “முற்றம்”
எனது தொடக்கமானது...

**– கவிஞர். உ. அ. சிந்து.**



# தாய்

ஆறு அறிவைச் சுமந்த என் அன்னையே
அறுசுவை தந்தாயே அம்மா எனக்கு
நாளும் காலை உன்னை வணங்கி
திரும்பி வந்தேன் வெற்றியைத் தாங்கி
தரம் பிரித்து இறைவனிடம் இருந்து
வளர்த்தாய் என்னை உயர்வாய்
உன் உயிருக்காக உன் கரம் ஏந்தி
கடவுள் முன் நின்றாய் கால் கடுக்க
தாயே உன் பசியைப் போக்க
அயராமல் பாடுபடுவேன் உன்னைக் காக்க
ஆயிரம் பொற்காசுகள் தந்தாலும்
அது உமதன்புமுன் தூசாகும் அம்மா.

**சிற்பி. கே. எம். ஆர்.**



# சுப.வீ.அவர்களின் பதிவு

பாஜக செயலாளர்களில் ஒருவரான திரு. கே. டி. ராகவன் அவர்கள், தொலைக்காட்சிகளில் பேசும் போது, தந்தை பெரியார் அவர்களை, ஈ.வி.ராமசாமி என்றுதான் குறிப்பிடுவார். கலைஞரைக்கூட, கலைஞர் என்று குறிப்பிடுவார். ஆனால் பெரியாரை மட்டும் அப்படிக் கூறவே மாட்டார். திரு. ஹெச் ராஜாவும் அப்படித்தான். அது குறித்த நம் நண்பர்கள் சிலர் தேவையில்லாமல் கோபப்படுகின்றனர். இத தேவையற்றது. அய்யாவின் பெயர் ராமசாமிதானே! அவர் பெயரைச் சொல்லி அவரை அழைப்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

அப்படியானால், சங்கராச்சாரியார்களை, ஜெயேந்திரன், விஜயேந்திரன் என்று அவர் பெயர் சொல்லி அழைப்பதில்லையே என்கின்றனர். தேவையில்லை, அது அவரவர் விருப்பம். நாம் பெரியாரால் பயன் பெற்றோம். அதனால் அவரை அப்படி அழைக்கின்றோம். அவர்கள் சங்கராச்சாரியார்களால் பயன் பெற்றார்கள். எனவே அவர்கள் அப்படி அழைக்கின்றனர்.

அவர்கள் பெரியாரால் பயன் பெறவில்லை என்பது மட்டுமில்லை. தாங்கள் பெற்றிருந்த சமூக அதிகாரத்தையும், பாவம், இழந்தார்கள். அந்தக் கோபம் அவர்களுக்கு இருக்கத்தானே செய்யும். நினைத்துப் பாருங்கள். என் தாத்தா, அவர் தாத்தாவை ‘சாமி’ என்றுதான் அழைத்திருப்பார். அவர் தாத்தாவைப் பார்த்ததும் என் தாத்தா, துண்டை எடுத்துக் கக்கத்தில் வைத்திருப்பார்.

ஆனால் இன்றோ, நான் அவரை சாமி என்று அழைப்பதில்லை. நண்பர் ராகவன் என்று அழைக்கிறேன். அவருக்குச் சமமாக ஒரே இருக்கையில் அமர்கிறேன். இதுவெல்லாம் அவர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தத்தானே செய்யும்! பெரியார் மாதிரி ஒருவர் பிறக்காதிருந்தால், திரு. ராகவன் சோபாவில்

அமர்ந்திருக்க, இந்நேரம் நானும், அருள்மொழி போன்றவர்களும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தரையில் அமர்ந்துதானே வாய்பொத் திப் பேசியிருப் போம். தொலைக்காட்சி நெறியாளரும், அவாளாக இல்லை யென்றால், எங்கள் பக்கத்தில் தரையில் தான் அமர வேண்டியிருக்கும்!



அந்தக் காலமாக இருந்தால், ராகவன் என்னைப் பார்த்து, வயது வித்தியாசம் எல்லாம் ஒரு பொருட் டென்று கருதாமல், “என்னடா அம்பி வீரபாண்டியன், எப்படியிருக்கே?'' என்றுதானே கேட்டிருப்பார். இப்போது “அண்ணன் எப்படி யிருக்கீங்க?“ என்று அன்போட (?) கேட்கிறாரே! இத்தனை மாற்றங் களுக்கும் இந்தப் பெரியார்தான் காரணம் என்கிற போது, அவருக்குக் கோபம் வரத்தானே செய்யும்? அதில் என்ன தவறு?

இவ்வளவு சமூகப் பெருமைகளையும் தாங்கள் இழப்பதற்குக் காரணமாக இருந்த ஒருவரைப் போய் அவர் ஏன் பெரியார் என்று அழைக்க வேண்டும். நாம் எதிர்பார்ப்பது வன்முறை இல்லையா? ஆனாலும் என்ன ஒரு பெரிய இடைஞ்சல் என்றால், நம் அய்யா வின் பெயரிலேயே ‘சாமி’ இருக்கிறது. அதனால் வேறு வழியின்றி, நம் அய்யாவை அவர்கள் இப்போது சாமி, சாமி என்று அழைக்க வேண்டியிருக்கிறது. அதனையும் விட்டுத் தொலைக்க ஏதேனும் வழி கண்டு பிடித்து விடுவார்கள்.

ராகவன் கெட்டிக்காரர், புத்திசாலி. எப்படியாவது இந்தப் பெயரை ஒலிக்காமல் இருக்க ஒரு வழி கண்டு பிடித்து விடுவார். இல்லையானால், சாமி என்று அழைப்பதைவிட, பெரியார் என்றே சொல்லித் தொலைத்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தாலும் வந்துவிடுவார்.

அவர் உடல்மொழியில் ஓர் ஆணவம் இருக்கிறது. கேலியும் கிண்டலுமாகப் பேசுகின்றனர் என்கின்றனர். எல்லாவற்றையும் இழந்துவிட்ட பிறகு, அவைகளைக் கூட அவர் வைத்துக் கொள்ளக் கூடாதா? இதெல்லாம் என்ன நியாயம்? அவர் மனநிலையை, அவர் கோபத்தை, அவர் பக்கம் உள்ள நியாயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கள் தாத்தா காலத்தில் இருந்த நிலைமை, மீண்டும் தங்கள் பேரன்கள் காலத்திலாவது வந்து விடாதா என்று அவர்கள் ஏங்குகின்றனர். அந்த ஏக்கம் அவர்களுக்கு இருக்கக் கூடாதா என்ன?

சரி, ராமரவி என்று ஒருவர் வேறு ராமசாமி நாயக்கர் என்று தொலைக்காட்சிகளில் பேசுகிறாரே, அது ஏன் என்று கேட்கின்றனர். ஐயோ அவர் ஒரு அப்பாவி, நம் பிள்ளை அவர். நாயக்கர் என்பது ஆள் பெயரா? சாதி பெயரா? என்று கூடத் தெரியாமல், விவாதங்களில் விழிக்கின்றார். அவர் விழிப்பதில் இருந்தே தெரியவில்லையா, அவர் நம் பிள்ளை என்று. நண்பர் ராகவனிடம் இருப்பது போல, ராமரவியிடம் அந்த எள்ளல், ஏகடியம் எல்லாம் இருக்கிறதா பாருங்கள். ஏதோ உணர்ச்சி வயப்பட்டு அல்லது வயப்பட்டதைப் போல ஒரு தோற்றம் இருக்கும். அவ்வளவுதான். உண்மையில் ராகவன் கோபத்தில் இருக்கும் நியாயம், ராமரவி கோபத்தில் இல்லை. அதில் ஒரு நன்றியுணர்ச்சி மட்டும் குறைகிறது. மற்றபடி தப்பு ஏதும் இல்லை.

“கணவனை இழந்ததாலே கண்ணகி கோபம் நியாயம்“ என்பார் கவிஞர் தணிகைச் செல்வன். அனைத் தையும் இழந்ததால், ராகவன் கோபம் நியாயம், நியாயம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

இருக்கட்டும், சங்கராச்சாரியார் போன்றவர்களால் தானே நாம் சமூக இழிவைப் பெற்றோம். அப்படி யிருக்க, நண்பர் ராகவனைப் போல, நீங்களும் அவர்கள் பெயர்களைக் குறிப்பிடும்போது, சங்கரன், விஜயேந் திரன் என்று குறிப்பிட வேண்டியதுதானே, பாரதியார் என்று ஏன் சொல்ல வேண்டும், அவர்களைப் போலவே கவிஞர் சுப்பிரமணி என்று சொலல வேண்டியதுதானே என்று நண்பர்கள் கேட்கின்றனர். அது எப்படி முடியும்? நாம், நாகரிகம் தெரிந்தவர்களா யிற்றே!



ராஜீவ் காந்தி கொலையில் உண்மைகள் வெளி வருமா? நீதிமன்றத்தின் தனிச்சிறப்பு நிலைநிறுத்தப் படுமா? அல்லது அழிக்கப்படுமா?

ராசீவ்காந்தி என்ற மாமனிதரால் உருவாக்கப்பட்ட அதிரடிப்படை இன்று உலக அரங்கில் தலைசிறந்த அதிரடிப்படைகளில் ஒன்றாக விளங்குகிறது.

ஏழைகளின் பிள்ளைகள், பாமர மக்களின் பிள்ளைகள், உலகத்தை தங்களது கைக்குள் அடக்கி உலக நாடுகளோடு போட்டியிடும் அளவிற்கு வளர்ந்துள்ளார்கள் என்றால், அதற்கு முழுமுதற் காரணம் ராசீவ்காந்திதான். இந்தியாவில் கணினியை வலுக்கட்டாயமாக புகுத்தி மாபெரும் புரட்சிக்கு வித்திட்டவர் ராசீவ்காந்தி.

13 அம்சக் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளும்படிச் செய்து, இலங்கையில் தமிழருக்கு நாடு பெற்றுத் தரும் செயலில் ஈடுபட்டவர். இந்தக் கருத்தை, ராசீவ்காந்தியின் இலங்கைப் பயணத்தில் அவரை துப்பாக்கியால் தாக்கியவன் கூறினான். தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவரை தமிழர்கள் கொல்வார்களா? இதுவரை அந்த உண்மை வெளிவரவில்லை. இந்தக் கொலை வழக்கில் பலர் விசாரிக்கப்படாமலே இருக்கிறார்கள். சுப்ரமணியசாமி இந்திராகாந்தி காலத்தில் அமெரிக்காவின் ஏஜெண்ட்டாக செயல்பட்டவர் என்று திரு. நாஞ்சில் சம்பத் அவர்கள் தெளிவாகக் கூறுகிறார். ஜெயின் கமிசன் சிலரை விசாரிக்க வேண்டும் என்று கூறியது. அதில் முக்கியமானவர் சுப்ரமணியசாமி. சந்திராசாமியையும் விசாரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் இருவரையும் விசாரிக்கவில்லை என்று திருச்சி வேலுச்சாமி அவர்கள் கூறுகிறார்கள்.

கொலைச்சதி செய்ததாக திக்கற்றோர், பதினேழு வயது இளைஞர்கள், அப்பாவிகள் சேர்க்கப்பட்டு, குற்றவாளிகள் ஆக்கப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்காக யாராவது வழக்காட முன்வந்தால், இந்த சுப்ரமணியசாமி தன்னை எதிர் மனுதாரராக சேர்த்துக் கொள்கிறார். காரணம் இவர்கள் விடுதலையாகி வெளியில் வந்து, அதிகாரிகள் தங்களை விசாரித்த முறையையும் எப்படி குற்றவாளி களாக்கினார்கள் என்ற விபரத்தையும் சொன்னால் இந்திய நாடே அதிர்ச்சிக்கு உள்ளாகும் என்று எண்ணி இவர்கள் வெளியே வர முடியாதபடி தந்திர வேலைகளைச் செய்கிறார். சுப்ரமணியசாமியும் சந்திரா சாமியும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தவர்கள். ராசீவ்காந்தி கொலை செய்யப்பட்ட அன்றே, விடுதலைப்புலிகள் தான் கொலை செய்தனர் என்று சுப்பிரமணியசாமி சொல்கிறார் என்றால், இவர் சந்தேகத்திற்குரியவர் தானே. இந்தக் கொலையில் ஆர்.எஸ்.எஸ். இயக்கமும்

# உண்மையைத் தேடி

**இராஜாசிங்**

இருக்குமோ என்ற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டதுண்டு. காரணம், நாட்டின் உண்மையான முன்னேற்றத்திற்கு யார் முயன்றாலும் அவர்களை அழிப்பது அந்த இயக்கத்தின் நோக்கமாக இருந்திருக்கிறது. உதாரணம் மகாத்மாவின் கொலை. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு தமிழகத்தில் பல ஆண்டுகள் தடை இருந்ததை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

சண்முகம் பண்ணையாரை விசாரிக்கும்போது இரண்டு கம்பெனி கருப்பு பூனைப்படை வரவழைக்கப்பட்டு, விடுதலைப்புலிகளுக்கு கடத்த இருந்த பெட்ரோல், டீசல், ஜெலட்டீன் குச்சிகள், வயர்லஸ் கருவிகள் போன்றவை தோண்டி எடுக்கப்பட்டது என்றும் இதனால் இவர் இந்தியத் திருநாட்டிற்கு எதிராக ஆயுதம் வைத்திருந்தார், விடுதலைப்புலிகள் அமைப்போடு தொடர்பு கொண்டிருந்தார், நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருந்தார், இவர் மிகப்பெரிய பயங்கரவாதி என்று கதை கட்டப்பட்டது. இவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு ஒரு காவலரின் பாதுகாப்பில் இருக்கும்போது தப்பிச் சென்றுவிட்டார். இவர் தப்பியதற்காக ஒரே ஒரு காவலர் மட்டும் சஸ்பெண்ட் பண்ணப்பட்டார் என்று ரகோத்தம்மன் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், பஞ்சாப் ஜெயிலில் இருந்து ஒரு பயங்கரவாதி தப்பிச் சென்றார். அவர் தப்பிச் சென்றதற்காக டிஜிபி முதல் கடை நிலை காவலர் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

அதற்கு அவர்கள் கூறும் காரணம் ஒரு பயங்கரவாதியை, மேல் அதிகாரிகளின் பொறுப்பில் ஒப்படைக்கும்போது அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் பாதுகாப்புகளையும் அந்த மேல் அதிகாரிதான் கவனிக்க வேண்டும். பயங்கரவாதி தப்புவதற்கு அதிகாரிகளின் கவனக்குறைவே காரணம். அதிகாரிகள் தங்களது கடமைகளைச் செய்யவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் சன்முகம் பண்ணையார் விசயத்தில் இது கடைபிடிக்கப்படவில்லை. இதற்குள் இருக்கும் மர்மம் என்ன? சன்முகம் பண்ணையார் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்பட்டது. பஞ்சாபில் தீவிரவாதி பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இருவரும் தீவிரவாதிகள், இரண்டு பேரும் தப்புகின்றனர், இரண்டு பேருடைய குற்றங்களும் தன்மைகளும் நிகழ்வுகளும் ஒன்றுபோல் அமைந்துள்ளன. அப்படி இருக்கையில் ராசீவ்காந்தி கொலையை விசாரிக்கும் அதிகாரிகள் சன்முகம் பண்ணையாரிடம் இருந்த ஒரே ஒரு காவலரை மட்டும் பதவி நீக்கம் செய்துள்ளனர். இதை சரியான செயல்பாடே என்று 3பேர் அடங்கிய பெஞ்ச் ஏற்றுக்கொண்டு உச்சநீதி மன்றம், அந்த அடிப்படையில் தீர்ப்புக் கூறியது. ஆனால், பஞ்சாப் தீவிரவாதி தப்பித்த விசயத்தில் டிஜிபி முதல் கடைநிலை காவலர் வரை இடைநீக்கம் செய்யப்பட்டனர். நீதி எப்படி இருக்கிறது என்று கவனியுங்கள்.

இரவிச்சந்திரன் அவர்கள் தன் இளம் வயதில், பள்ளிப்படிப்பை (பதினோராம் வகுப்பு) நிறுத்தி விட்டு விடுதலைப்புலிகள் மேல் உள்ள அன்பினால் இலங்கை சென்று, அவ்வியக்கத்தில் சேர்ந்து, பின்நாட்களில் தமிழகம் திரும்பி உள்ளார். ஆனால் சிறப்பு புலன் விசாரணைக்குழு இவரை இலங்கை வாசி (இலங்கையில் பிறந்து வளர்ந்தவர்) என நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர். இது நீதிமன்றத்தை ஏமாற்றும் செயலாக நீதிமன்றத்திற்குத் தெரியவில்லை. இது புலன் விசாரணையை நடத்தியவர்கள் செய்த தவறா? நீதிமன்றம் செய்த தவறா? இப்படிப்பட்ட முரண்பாடுகளை நீதிமன்றம் கவனிக்காவிட்டால், நாளை இந்தியாவில் இருந்து வழி தெரியாமல் பாகிஸ்தானுக்கு செல்கின்ற இராணுவ வீரர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்று ஒரு நிலைப்பாட்டை இந்திய அரசு எடுக்குமா? அல்லது இங்கிருந்து இலங்கைக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டு பின் இந்தியா திரும்பினால், இவர்கள் கருத்துப்படி அவர் இலங்கையைச் சேர்ந்தவர் ஆகி விடுவாரா என்ற கேள்விகள் இயல்பாகவே எழும்பு கின்றன. ஆக, இந்தக் குழப்பங்களை எல்லாம் நீதிமன்றம் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்தக் கொலை வழக்கில் குமாரன் பத்மநாபா குற்றவாளி என்று உச்சநீதிமன்றத்தில் சொல்லப்பட்டிருந்தும் அவர், இன்றும் இலங்கையில் அரசின் அனைத்துச் சலுகைகளையும் பெற்று முடிசூடா மன்னனைப் போல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். நட்பு நாடான இலங்கையின் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் உள்ள நிலையில் பாரதப்பிரதமர் மோடி, வெளியுறவுத் துறை அமைச்சர் சுஸ்வா சுவராஜ், மோடியின் ஆலோசகர் சுப்ரமணியசாமி போன்றோர் அங்கு பலமுறை சென்று வந்துள்ளனர்.

இந்தியாவில் நடந்த மிகப்பெரிய கொடூரக் கொலை வழக்கின் மிக முக்கியமான குற்றவாளியான குமாரன் பத்மநாபாவை இந்தியாவிற்கு கொண்டு வந்த விசாரித்து உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க எவ்வித பேச்சுவார்த்தையும் முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை. இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**தொடரும்...**

மூட மதவெறி நச்சுச் செயல்களால் வெம்பி நசுங்கு கின்றன குழந்தைகள்! அழிவை அழைக்கும் கொலைக் கூடங்களாகி வருகின்றன கல்விக்கூடங்கள்!

இனி முற்போக்குச் சிந்தனை, பகுத்தறிவு, உணர்ச்சி, சமூகமாற்றம் இவற்றிற்கு எதிரான வேலைகள்

தேவைப்படாது! பள்ளிகளே அந்த அழிவுப்பணியைப் பெற்றோரிடம் காசு வாங்கிக்கொண்டு விரைவாகச் செய்து முடித்துவிடும்.

நஞ்சேறிக் கிடக்கும் குழந்தைகளுக்கு நாடு, மொழி, இனம் பற்றிய பேச்சுகள் பகடி (கேலி)க்கு உரிய ஏளனச் செய்திகளாகத் தோன்றுகின்றன.

அதிகார அரசியலில் பணம் குவித்த அரசியல்தலைவர் களில் பெரும்பாலோர் கட்டணக்கல்விக் கொள்ளைக்கூடங்க ளின் பாதுகாவலர்கள் ஆகிவிட்டார்கள்!

ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகளில் புகட்டப்படுவது ஆங்கிலம் மட்டுமா? வடமொழி வழிபாடும் இந்தி ஆதரவும் மதவெறித்திணிப்பும் அந்நியப் பண்பாடும் சேர்த்தே புகட்டப் படுகின்றன.

முற்போக்குக் கருத்துப்பரவலும் போராட்ட முன்னெடுப் பும் – தமிழ்வழி பயிலும் மாணவர்கள் வழியாகவே நடந்து வருவதை ஊன்றிப்பார்த்தால் உணரமுடியும்.

தமிழ்வழிக் கல்விமுறை தடுக்கப்படுவதன் காரணம் அதுதான்! தமிழ்வழிக் கல்விக்குக் குரல்கொடுக்காத அரசியல் கட்சிகள் அனைத்தையும் தூக்கி எறிந்தாக வேண்டும். கிளையில் அமர்ந்து கொண்டு மரத்தை வெட்டச் சொல்லித் தரும் கட்சிகள் எதற்காக?

எழுத்தைக் கற்பிப்பதிலேயே இந்து வெறித்திணிப்பை ஆங்கிலப்பள்ளிகள் தொடங்கி விடுகின்றன.. முதலிய எழுத்து களை அர்ஜுனா, பீமா என்றே அறிமுகப்படுத்துவது நெடுங் காலமாக நடந்து வருகிறது. தமிழ்வழிக் கல்வி செழித்திருந்த அரசுப்பள்ளி பாடநூல்களிலேயே ராமா, சீதா என்றுதான் எடுத்துக்காட்டு தருவார்கள்!.

ஆங்கில வழிப் பள்ளிகளில் பாடம், பாடத்திட்டம், கல்வித் துறை எல்லாம் அவரவர் விருப்பத்திற்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டன! கைகட்டி நிற்கின்றன தமிழக அரசும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும்! மதவெறிக்குப் பாதை போடப் புதுப்புது உத்திகளில் இறங்கிவிட்டார்கள்.



மதவெறியூட்டி இளையோரைக் கருகவைத்துக் கொண் டிருக்கிறார்கள் – கட்டண முறைப் பள்ளிகளில்!

விநாயகர் சதுர்த்தி வந்தால் குழந்தைகளுக்கு விநாயகர் வேடம்! விவேகானந்தர், கிருஷ்ணர், இராமர் என எவரது பிறந்தநாள் வந்தாலும் வேடங்களில் குழந்தைகளை அலைய விடுவதில் பள்ளிகளுக்கிடையே போட்டி!

அசிங்கத்தின் உச்சமாக ஆசிரியர் காலைக் கழுவுவது பெற்றோர்களின் காலைக் கழுவுவது என வேதகாலம் நோக்கிப் பின்னோக்கி ஓடுகிறது தமிழ்நாட்டுக் கல்வி வண்டி!

மூடத்தனத்திலும் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கிறார்கள்! மடமை விலங்கிற்குக் குழந்தைகள் இரையாக்கப்படுவதைப் பார்த்தபடி நிற்கிறது பெற்றோர் கூட்டம்!

புதிதாய் இறங்கியுள்ள மதமூடக் கேவலத்தின் பெயர் “கன்யா பாதபூஜை தினம்”. பத்து வயதுக்குக் குறைவான சிறு மிகளே இதில் குறிவைக்கப்படுகிறார்கள்! அவர்கள் கால் களைத் தடவ சிறுவர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள்!

பாதபூசை எனத் துணியைத் தூக்கியபடி சிறுமிகள்! அண்ணாந்து பார்த்தபடி சிறுவர்கள்! தொட்டதைத் தொடர் வதற்கு வகுப்பறை! மானக்கேட்டை ஊக்குவிக்க சில ஆசிரி யப் பிறவிகள்! பள்ளி செய்யும் கல்விப்பணியா இது? உயி ரைக் கொடுத்து உருவாக்கிய தமிழ்வழிக்கல்வியும் பொதுப் பள்ளி முறையும் சூறையாடப்படுகின்றன.

தந்தை பெரியார் தலைமையில் முதல் மொழிப்போர் நடந்த 1938ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத் திலேயே உயர்நிலைப் பள்ளி எல்லாவகுப்பிலும், ஆங்கிலப் பயிற்றுமொழி தமிழகத்தில் அகற்றப்பட்டு விட்டது. பத்தவச் சலம் முதல்வரானபோது, ஆங்கிலவழிக் கல்வியை 200 பள்ளிக்கூடங்களில் அடம்பிடித்துக் கொண்டுவந்தார். பெரியார் தொண்டரான அன்றைய கல்வி இயக்குநர் நெ.து.சுந்தரவடிவேலு அதனை 50 பள்ளியாக மன்றாடிச் சுருக்கினார்.

பத்தவச்சலம் வைத்த கொள்ளி, பற்றி எரிகிறது இப்போது! தமிழுணர்வும் பகுத்தறிவும் பன்முகக் கருத்து அறிமுகமும் சிந்தனைத் தேடலும் – இன்றைய ஆங்கிலவழி வணிக முறைப் பள்ளிகளில் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன!

இளையோரை மதவெறிக்கும் அந்நியமொழிக்கும் பண்பாட்டுக் கேட்டிற்கும் பழக்கிவிட்டால், அறிவார்ந்த தமிழி னம் எதிர்காலத்திலும் இருக்க வாய்ப்பில்லை.

தமிழை நேசிக்காத எவரும், தமிழரையும் தமிழ்நிலத் தையும் நேசிக்க மாட்டார்கள். இப்போது, தமிழக நிலமும் வளமும் பறிக்கப்படுகின்ற பொருளியல் அழிப்பு ஒருபுறம்! மொழியழிப்பு மறுபுறம்! தமிழ்வழிக் கல்வி அழிந்தால், எல்லா அழிவும் எளிதாகி விடும்.

**– சூலூர் பாவேந்தர் பேரவை.**

# தமிழின் எதிரிகளை எதிர்த்து நில்!



# ஜாக்கிசான் எனும் கூலித் தொழிலாளி

நாம் உண்ணவே உணவு இல்லை நமக்கு ஒரு குழந்தை தேவையா என்று மனம் வருந்தி வாழ்ந்த கூலித்தொழிலாளியின் மகனாகப் பிறந்தவர் இன்று உலக சாதனையாளராக உள்ளார் என்றால் நம்புவீர்களா? ஹாங்காங்கில் 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏழாம் தேதி ஓர் அழகான ஆண் குழந்தை கொழு கொழு என்று பிறந்தது. குழந்தையின் தந்தை சார்லஸ்சான் ஒரு சமையல்காரர். தாய் லீலீ வீட்டு வேலை செய்யும் பெண்.

பிரசவம் பார்த்த டாக்டர், அந்தக் குடும்பத்தினர் நிலைமையையும், குழந்தையின் அழகையும் பார்த்து, தானே தத்தெடுத்து வளர்க்க ஆசைப்பட்டார். ஆனால், அதற்கு ஏழைப் பெற்றோர் மறுத்து விட்டனர். அந்தக் குழந்தைக்கு சான் காங்சாங் என்று பெயர் வைத்தனர். அதற்கு ஹாங்காங்கில் பிறந்தவன் என்று அர்த்தம். இந்த நிலையில் பெற்றோருக்கு ஆஸ்திரேலியாவில் வேலை கிடைத்தது. அங்குள்ள சாசனா என்ற நாடகப் பள்ளியில் காங்சாங் சேர்ந்தார்.

தனது ஏழாவது வயதிலேயே கராத்தே, குங்பூ என மார்சியல் கலைகள் அனைத்தையும் கற்றார். அவர் தினமும் 18 மணி நேரம் பயிற்சி எடுத்தார். எட்டு வயதில் 'பிக் அண்ட் லிட்டில் வாங்ஷன்' என்ற படத்தில் முதன் முதலாக நடித்தார். அவருடைய 18 வயதில் புரூஸ் லீ நடித்த 'என்டர் தி டிராகன்' படத்தில் ஒரு சண்டைக் கலைஞர் வாய்ப்புக் கிடைத்தது. உயரமான இடத்தில் இருந்து குதிக்கும் காட்சியில் மற்ற ஸ்டண்ட் நடிகர்கள் தயக்கம் காட்ட, காங்சாங் உடனே ஓடி வந்து குதித்து புரூஸ் லீயைக் கவர்ந்தார்.

அதன் பின்பு வாய்ப்புகள் கிடைக்காததால், கட்டிட கூலி வேலை செய்தார். தினக்கூலியாக வேலை பார்த்தாலும், இவரது துருதுருப்பையும், துள்ளலையும், உருவத்தையும் பார்த்த சக தொழிலாளர் ஒருவர் 'லிட்டில் ஜாக்' என்று அழைத்தார். இதுவே பின்னர் 'ஜாக்கி' ஆனது. அப்போது ஹாங்காங்கில் இருந்து ஒரு தந்தி வரவும், ஜாக்கிசான் என்ற புதிய பெயருடன் புறப்பட்ட இவர், 'பிஸ்ட் ஆப் ப்யூரி' என்ற படத்தில் நடித்தார். அப்போது அவர் வயது 21. அன்று முதல் அவரது வெற்றிப் பயணம் தொடர்ந்தது.

இன்று காமெடி, சண்டைப் படங்களுக்கு நிகரில்லாத ஹீரோவாகவும், ஆசியாவின் மிகப்பெரும் ஸ்டாராகவும் ஜாக்கிசான் உள்ளார். அன்றைய கூலித் தொழிலாளியான ஜாக்கிசான், தனது வாழ்க்கை வரலாற்றை 'ஐ ஆம் ஜாக்கிசான் தி மியூசிக்கல்' என்ற பெயரில் மியூசிக் ஆல்பமாக தயாரிக்க இருக்கிறார்.

**அலெக்சாண்டர்.**



# தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தின் முகவரி ம.நடராசன்

திரு. ம. நடராசன் அவர்கள் செயலலிதாவின் ஆட்சி அமர்வுக்கு பின்புலமாக செயல்பட்டவர் என்ற கருத்து பரவலாக அரசியல் புரிந்தவர்களின் நடுவில் பேசப்படும் ஒன்று. ஒரு காலத்தில் செயலலிதாவிற்காக இரட்டை இலைச் சின்னத்தை, புகழ்பெற்ற வழக்கறிஞர் கபில் சிபலை வைத்து வாதாடி பெற்றுத் தந்தவர். தமிழக அரசியல் பல ஆண்டுகள் இவரைச்சுற்றித்தான் சுழன்றது என்று சொல்வது முற்றிலும் உண்மையே. ஆனால், திரு. நடராசன் அவர்கள் தீவிரமான தமிழ்ப்பற்றுக் கொண்டவர் என்பது தமிழ் உணர்வாளர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒன்று.

தமிழ் மொழியைக் காக்கும் பொருட்டு, 1965ஆம் ஆண்டு, தனது மாணவப் பருவத்திலேயே மாணவர்களின் தலைவராயிருந்து, மொழிப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். அந்நாட்களில் நடைபெற்ற இந்தித் திணிப்பை மிகத் தீவிரமாக எதிர்த்தவர் திரு. நடராசன் அவர்கள். இவரின் சமகால மாணவர்கள் திரு. வைகோ அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும். திரு. எல். கணேசன் அவர்களது வழிகாட்டலில் வளர்ந்தவர் திரு. நடராசன் அவர்கள்.

பேரறிஞர் அண்ணாவின் மீது அளப்பறிய பற்றுக் கொண்டிருந்த நடராசன் அவர்கள், அண்ணாவின் பேச்சுகளையும் எழுத்துகளையும் பல தொகுப்பு களாக்கி தமிழுலகிற்குத் தந்தவர். சமூகநீதிக் காவலர் மறைந்த திரு. கன்சிராம் அவர்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவர்.

இவரைப் பற்றி தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் தலைவர் திரு. பெ. மணியரசன் அவர்கள் நினைவு கூர்ந்திருக்கிறார். “1965இல் இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டில் நடந்த உலகத்தில் ஒப்புமை காட்ட முடியாத வரலாற்றுச் சிறப்புமிக்க மொழிப் போரின் மாணவத் தலைவர்களில் திரு. நடராசனும் ஒருவர். நான் அப்போது திருக்காட்டுப்பள்ளி சர் சிவசாமி உயர்நிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்பு படித்து வந்தேன். எங்கள் பள்ளியின் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவின் செயலாளராக நான் இருந்தேன்.

1965 சனவரி 25 அன்று இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் நடந்த மாணவர் பேரணி ஏற்பாட்டாளர்களில் நடராசன் அவர்களும் ஒருவர். நான் அந்தப் பேரணியில் கலந்து கொண்டேன். மயிலாடுதுறை அ.வ.அ. (ஏவிசி) கல்லூரியில் இளங்கலை படித்துக் கொண்டிருந்த மாணவர் சாரங்கபாணி, இந்தித் திணிப்பை எதிர்த்து கல்லூரி வாயிலில் தீக்குளித்து இறந்தார். அவருக்கு வீரவணக்கம்

செலுத்தவும் அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்யவும் தஞ்சை திலகர் திடலில் மாபெரும் மாணவர் கூட்டம் நடந்தது.

சாரங்கபாணி குடும்பத்தினருக்கு நிதி உதவி செய்வதற்கு திருக்காட்டுப்பள்ளி மாணவர்கள் திரட்டிய ஒரு சிறு தொகையை நான் கொண்டு வந்து திரு. நடராசன் அவர்களிடம் கொடுத்தேன். அப்போது அவர் பச்சை மையில் எழுதி கையெழுத்துப் போட்டு அதற்கான ரசீதை என்னிடம் கொடுத்தார்.“

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் தமிழ்ப்பற்றாளரான திரு. ம. நடராசன் அவர்களுக்கு மக்கள் தொடர்பு அதிகாரி பணி வழங்கி, மன்னை நாராயணசாமி அவர்களது ஏற்பாட்டில் திரு. நடராசன் அவர்களுக்கும் திருமதி சசிகலா அவர்களுக்கும் திருமணம் செய்து வைத்தவர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற தமிழ் இன அழிப்பு நினைவாக தமிழர் பேரமைப்பின் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்களின் முயற்சியால், இன அழிப்பில் மாண்டவர்களின் நினைவாகவும் தமிழீழ விடுதலைக்கு உயிர் கொடுத்த மாவீரர்கள் நினைவாகவும் நினைவிடம் தஞ்சை விளார் சாலைக்கருகில் அமைக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் முற்றம் என்ற அந்த நினைவகத்திற்கு தனது நிலத்தையும் தந்து, அங்கே நடந்த ஒவ்வொரு கட்டுமானத்திலும் தனது தனிப்பட்ட ஆர்வத்தை உட்புகுத்தி நிறைவுறச் செய்தவர் திரு. ம. நடராசன் அவர்கள். இந்த நினைவகத்திற்காக தனது மூன்று கார்களையும் ரோலக்ஸ் கடிகாரத்தையும் மேடையிலேயே ஏலம் விட்டு, அதில் வந்த 46 இலட்சம் பணத்தை நினைவகத்துக்கு வழங்கியவர் திரு. ம. நடராசன் அவர்கள்.

புதிய பார்வை, தமிழரசி என்ற இதழ்களை தமிழகத்தில் நடத்தி, தன்னை மிகச்சிறந்த பத்திரிகை யாளராக, உணர்வுமிக்க தமிழராக அடையாளம் காட்டிக் கொண்டவர் திரு. ம. நடராசன் அவர்கள். ஐயா அவர்களின் மறைவு தமிழார் வலர்களின் நடுவில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதழியலாளராகிய திரு. ம. நடராசன் அவர்களது மறைவிற்கு முற்றம் இதழ் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

– ஆசிரியர்.



அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர்கள், வெளியிட்டாளர்கள்சங்கத்தின் நான்காவது மாநிலமாநாடு புதுவையில் இச்சங்கத்தின் தேசியத்தலைவர் லயன். முனைவர். எஸ். இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. விழாவை புதுச்சேரி முதலமைச்சர் மாண்புமிகு நாராயணசாமி, மாண்புமிகு ஜான் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர். முற்றம் ஆசிரியர் விசவனூர். வே. தளபதிகலந்து கொண்டார். உடன் புதுவை பத்திரிகையாளர்கள்.

இந்தியாவிலேயே முற்றிலும் இயற்கை வேளாண்மைக்கு மாறிய பெருமையைப் பெற்றிருக்கிறது நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஒதுங்கி நிற்கும் மாநிலமான சிக்கிம்.

இதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்ந்தவர் அந்த மாநிலத்தின் முதல்வர் பவன்குமார் சாம்லிங். தொடர்ந்து ஐந்தாவது முறையாக முதல்வராக இருக்கும் இவர், அடிப்படையில் ஒரு விவசாயி. உணவையும் நிலத்தையும் நஞ்சாக்கும் நவீன விவசாயத்திலிருந்து மாற்றத்தை விரும்பிய பவன்குமார். 2003ல் சிக்கிம் மாநிலத்தை ஆர்கானிக் ஸ்டேட் எனச் சட்டப்பேரவையில் பிரகடனம் செய்தார். மாநிலத்தில் ரசாயன உரங்களுக்கும் பூச்சிக்கொல்லிகளுக்கும் முற்றாகத் தடை விதிக்கப்படுகிறது. தடையை மீறுவோருக்கு ஒரு லட்ச ரூபாய் அபராதம், மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை எனவும் தடாலடியாக.. அறிவித்தார்.

வழக்கம் போல இந்த அறிவிப்பு அரசியலாக்கப்பட்டு எதிர்ப்புகள் தூண்டிவிடப்பட்டன. எதைப் பற்றியும் கவலைப்படாத பவன்குமார், தனது திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, ஆர்கானிக் ஸ்டேட் போர்டு என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் மாநிலத்தில் 8 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இயற்கை விவசாயத்திற்கு மாற்றுவது என தீர்மானித்துக்கொண்டு செயலில் இறங்கியது இந்த வாரியம்.

ஒரு பக்கம் இயற்கை வேளாண்மையை ஆதரிக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வுப் பிரசாரம், மறுபுறம் இயற்கை வேளாண்மையை மேற்கொள்வதற்கும் இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கும் தாராளமான மானியங்களை வழங்கியது மாநில அரசு, மாநிலம் முழுவதும் 24,536 இயற்கை உரத் தயாரிப்பு மையங்களும் 1,447 பசுந்தாள் உரத் தயாரிப்பு மையங்களும் அரசால் நிறுவப்பட்டன. இயற்கை உரத் தயாரிப்பு முறைகள் குறித்து உழவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளால் 2009ஆம் ஆண்டு இறுதிக்குள் எட்டாயிரம் ஏக்கர் நிலங்கள் இயற்கை வேளாண்மைக்கு மாற்றப்பட்டன. இதற்கிடையே 2006 07ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய மானியத்

# இயற்கை வேளாண்மைக்கு வாரீர்!



**சு.மணிமாறன்**

துடன் கூடிய ரசாயன உரக்கோட்டாவை வேண்டாம் என்று அறிவித்தார் பவன்குமார். அடுத்தகட்டமாக ஓராண்டுக்குள் 14 ஆயிரம் ஏக்கரை நஞ்சில்லா பூமியாக மாற்றுவது எனத் திட்டமிடப்பட்டு, அதுவும் நிறைவேற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சிக்கிம் ஆர்கானிக் மிஷன் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, அதன் கீழ் கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு இயற்கை வேளாண் முறைகள் பிரபலப்படுத்தப்பட்டன. இந்தக் கிராமங் களுக்கு பயோ வில்லேஜ் என்று பெயரிடப்பட்டது. நல்ல திட்டங்கள் பலன் தராமல் தோற்றுப் போனதற்குக் காரணமே தொடர் ஆராய்ச்சிகளும் வளர்ச்சியும் இல்லாமல் போனதுதான்.

இதைப் புரிந்துகொண்டு இயற்கை வேளாண் மையை மேம்படுத்தவும் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும், Center Of Excellence For Organic Farming என்ற ஆராய்ச்சி மையத்தை உருவாக்கினார். இத்தனை முன்னேற்பாடுகளுடன் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் சிக்கிம் மாநிலத்தை நஞ்சில்லா விவசாயப் பூமியாக மாற்றத் திட்டமிட்டு, அதை வெற்றிகரமாகச் சாதித்தும் காட்டியிருக்கிறது பவன்குமார் சாம்லிங் அரசு.

தொடக்கத்தில் சில சிரமங்கள் இருந்தாலும் இப்போது சிக்கிம் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மையின் மகத்துவம் புரிகிறது. இவர்கள் விளைவிக்கும் இயற்கை வேளாண் பொருட்களை வாங்குவதற்கு டெல்லி, மத்திய ஆசிய நாடுகளில் தவம் கிடக்கிறார்கள்.

அண்மையில் சிக்கிம் சென்றிருந்த தேசியப் பிற்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் கார் வேந்தன், அங்குள்ள இயற்கை வேளாண் நிலங்களை யும், விவசாயிகளையும் சந்தித்துத் திரும்பியிருக்கிறார். தன்னுடைய அனுபவத்தை அவர் பகிர்ந்துகொண்டார்:

நானும் ஒரு இயற்கை விவசாயிதான். அந்த ஆர்வத்தில் சிக்கிம் விவசாயிகளைச் சந்தித்துப் பேசினேன். சிக்கிமின் சில மலைப்பகுதிகளில் வாழும் ஒருசிலர் இயற்கை விவசாயத்தை எதிர்த்தாலும், அது எடுபடவில்லை. சிக்கிம் மாநிலத்தில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. இயற்கை வேளாண்மை மூலம் கடந்த ஆண்டில் மட்டுமே 80 ஆயிரம் மெட்ரிக் டன் விளைபொருட்களை சிக்கிம் விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். இதில் இஞ்சி 45,890 மெட்ரிக் டன், மோட்டா ரக மிளகு 3,510 மெட்ரிக் டன், மஞ்சள் 2,790 மெட்ரிக் டன், சன்ன ரகக் கோதுமை 4,100 மெட்ரிக் டன்.

வருடத்தில் மூன்று மாதங்கள் அங்கே கடும் குளிர் நிலவும். அதை சமாளிப்பதற்காக உடலுக்குக் கேட்டை உண்டாக்காத, ரசாயனம் கலக்காத பயோ விஸ்கி யையும் அங்கே தயாரிக்கிறார்கள்.

பயோ ஃபெர்ட்டிலைசர்ஸ் என்று சொல்லப்படும் இயற்கை உரம் தயாரிக்கும் பெரும் தொழிற்சாலையை அரசே நிறுவியிருக்கிறது. இதன் மூலம் ஒரே நேத்தில் 3000 மெட்ரிக் டன் இயற்கை உரம் தயாரிக்க முடியும். தெற்கு சிக்கிமில் ராவங்லா என்ற இடத்தில் 440 ஏக்கரில் அரோமா ஆர்கானிக் தேயிலைத் தோட்டத் தையும் அரசு நடத்துகிறது. இங்கு விளையும் உலகத் தரம் வாய்ந்த தேயிலை பெருமளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மிகவும் பின் தங்கிய சிக்கிம் மக்கள் ரசாயனத்தின் ஆபத்தை உணர்ந்து இயற்கை விவசாயத்துக்கு மாறி விட்டார்கள். ஆனால், நாம் அது குறித்த விழிப் புணர்வு கூட இல்லாமல் இருப்பது வேதனையளிக் கிறது" என்கிறார் கார்வேந்தன்.

ஜனவரி 18ஆம் நாள், சிக்கிமில் நடந்த விவசாயிகள் கருத்தரங்கில் இயற்கை விவசாயத்தில் சாதித்த பவன்குமார் சாம்லிங்குக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவித்திருக்கிறார் பிரதமர் நரேந்திர மேடி.

பசுமைப் புரட்சிக்கு முன்பு நாட்டில் இவ்வளவு நோய்கள் இல்லை. அதிக மகசூல் என்று ஆசைகாட்டி நிலங்களையும் உண்ணும் உணவையும் நஞ்சாக்கி விட்டார்கள். ரசாயன உரங்கள், உணவு உண்ணும் அத்தனை உயிர்களையும் சிறுகச் சிறுகக் கொல்கின்றன. ரசாயன உரங்களை ஒழிக்கப் போராடுவதுதான் இப்போது முக்கியம்.

கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 10 லட்சம் பேர் புற்றுநோய் பாதிப்பால் இறந்திருக்கிறார்கள். இதில் பெரும்பாலானவர்கள் பெண்கள், குழந்தைகள், இதற்கு ரசாயன உரங்களும் முக்கியக் காரணம். சிக்கிமைத் தொடர்ந்து உத்தராகண்ட், கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்கள் இயற்கை விவசாயத்தை நோக்கி நகர ஆரம்பித்திருக்கின்றன. ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் இது குறித்த விவாதங்கள் தொடங்கிவிட்டன. ஆனால், வளமான விவசாயப் பூமியைக் கொண்ட தமிழகத்தில் இயற்கை விவசாயம் குறித்த புரிதல் வேளாண் அதிகாரிகளுக்கே இல்லையே" என்கிறார்கள் உழவர் உழைப்பாளர் கூட்டமைப்பினர்.

மெல்லக் கொல்லும் இரசாயனத்தின் பிடியிலிருந்து சிக்கிம் மீண்டுவிட்டது. தமிழகம்?

**நன்றி : தினத்தந்தி**

# பிராமணர்கள், SC, ST மற்றும் OBC அரசியலமைப்பு ஒதுக்கீட்டில் படையெடுத்த இடங்களைக் காண்க.

1. ஜனாதிபதி செயலகத்தின் மொத்தப் பதவிகள் 49. இவர்களில்39பிராமணர்கள், SC-ST- 4.“ஓ.பி.சி 06

2. துணை ஜனாதிபதி செயலகத்தின் 7 பதவிகள். இங்கே ஏழிலும் பிராமணர்கள் இருக்கிறார்கள்.

3. கேபினட் செயலாளர் பதவிகள் 20. 17 பிராமணர்கள், SC-ST1, ஓ.பி.சி 002.

4. பிரதமரின் அலுவலகத்தில் மொத்தம் 35 பதவிகள். 31 பிராமணர்கள், SC-ST02, OBC - 02.

விவசாயத் திணைக்களத்தின் மொத்த பதவிகள் 274. 259 பிராமணர்கள், SC-ST5, ஓ.பி.சி 10

பாதுகாப்பு அமைச்சுப் பணிகள் 1379. 1300 பிராமணர்கள், SC-ST-48, ஓ.பி.சி 31.

7. சமூக நலன் மற்றும் சுகாதார அமைச்சின் மொத்தப் பதவிகள் 209, 132 பிராமணர்கள், SC-ST 48, ஓ.பி.சி 60.




8. நிதி அமைச்சின் மொத்த பதவிகள் 1008. 942 பிராமணர்கள், SC-ST-20, ஓ.பி.சி 46.

9. பிளானட் அமைச்சில் மொத்தம் 409 பதவிகள். 327 பிராமணர்கள், SC-ST19, ஓ.பி.சி 63.

10. தொழில் அமைச்சகத்தின் மொத்தப் பதவிகள் 74. 59 பிராமணர்கள், SC-SI- 4, ஓ.பி.சி 9

11. கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோலிய அமைச்சகத் தின் மொத்த பதவிகள்கள் 121. 91 பிராமணர்கள், ஷிசி ST 9, ஓ.பி.சி 21.

12. கவர்னர், லெப்டினன்ட் கவர்னர் 27 வது ஒட்டுமொத்த 25 பிராமணர்கள், SC-ST 0, ஓ.பி.சி2

13. தூதவர்கள் வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்ற னர் 140 இதில் 140 பேரும் பிராமணர்கள்

14. மத்திய அரசு பல்கலைக்கழக துணைவேந்தர் 108.100 பேர் பிராமணர்கள், SC-ST 03, OBC- 05.

15. மத்திய பொதுச் செயலாளர் பதிவுகள் 26. 18 பிராமணர்கள், SC-ST-1, “.ஓ.பி.சி7.

16. உயர்நீதிமன்ற நீதிபதி 330. 306 பிராமணர்கள், SC-ST- 4, ஓ.பி.சி 20.

17. உச்சநீதிமன்ற நீதிபதி 26. 23 பிராமணர்கள், SC-ST-01, ஓ.பி.சி 02.

18. மொத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி 3600, 2750 பிராமணர்கள், 300 SC-ST, 350 ஓ.பி.சி.

நாட்டின் மக்கள் தொகையில் 3% க்கும் குறைவான பிராமணர்கள் எவ்வாறு 90% பதவிகளைப் பெற்றனர்?

(“யங் இந்தியா“ எனப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் கிடைக்கிறது.)



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**




அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர், வெளியீட்டாளர் சங்கத்தின் சார்பில், தேசியத்தலைவர் லயன். டாக்டர். எஸ். இராஜேந்திரன் அவர்கள், உள்ளாட்சி சாரல் நாளிதழின் அலுவலகப் பணிக்குப் பயன்படும் விதமாக கணினியை அதன் வெளியீட்டாளர் காளியம்மாள் அவர்களிடம் வழங்கினார். அருகில் முற்றம் இதழின் ஆசிரியர். விசவனூர். வே. தளபதி, சங்கத்தின் பொறுப்பாளர்கள் இருதயராஜ், மூர்த்தி, வினோத் உள்ளிட்டோர்.



காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காத நடுவண் அரசைக் கண்டித்து பத்திரிகையாளர் சங்கங்களின் நிர்வாகிகள்ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள்சங்கத்தின் தலைவர் விசவனூர். வே. தளபதியும் கலந்து கொண்டார்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

தரமான
தயாரிப்பு!
உயர்வான
பாதுகாப்பு!

12 months Guarantee

BOAZ
ELECTRONIC IGINITOR

JOCHEN ENG. INDUSTRIES
*RAJKOT, BOMBAY, MADRAS*

